# ஞானச்சுடர்




சித்திரை

2024

31ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள் வழி

**இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்**
**தான்கண் டனைத்திவ் வுலகு.**

பொருள் : இன்சொல்லுடன் ஈதலைச் செய்து பாதுகாக்கக்கூடிய அரசனுக்கு இந்த உலகத்திலேயே அவன் விரும்பிய பொருளெல்லாம் கிடைக்கும். (இவ்வுலகம் அவன் வசமாகிவிடும் என்று பொருள்.) (387)

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்.**

பொருள் : நீதி செலுத்திப் பிறர் வருந்தாமல் காக்கின்ற அரசன் பிறப்பால் மனிதனாயினும் செயலால் கடவுளென்று மதிக்கப்படுவான். (388)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

## கூத்தாடுதே மனமென்ன கொடுமை

*பல்லவி*

கூத்தாடுதே மனமென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாதா உன்னடிமை



*அநுபல்லவி*

தீர்த்தங்க ளாடினேன் யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை என்னநான் செய்வேன் (கூத்)


*சரணங்கள்*

பார்த்த விடமெங்கும் நீயல்லா தில்லை
பாராமல் நானும் பட்டேன் தொல்லை
காத்தெனை யாள்வ துன்றன் கடமை
கருணைக் கடலே நானுன் உடைமை (கூத்) 01

பத்திசெய் யோக சுவாமி பாட்டைப்
பாடிப் படிப்பவர் பல்லூழி காலம்
உத்தம ராக உலகினில் வாழ்ந்து
வித்தகன் சேவடி விரவிநிற் பாரே (கூத்) 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 316

**2024** **பொருளடக்கம்** **சித்திரை**


| | | |
|---|---|---|
| நடராஜப்பெருமான் | கு. சோமசுந்தரம் | 01 – 02 |
| அறிவும் திருவும் | கு. குணாளன் | 03 – 05 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 06 – 09 |
| திரிபுகளும் திறனாய்வுகளும் | இராம ஜெயபாலன் | 10 – 14 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 15 – 16 |
| அறம் செய்ய விரும்பு | நா. நல்லதம்பி | 17 – 19 |
| தோல்வி நிலை என... | மு. செல்லத்தம்பி | 20 – 22 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 23 – 26 |
| பன்றித் தலைச்சி | ம. சிவயோகசுந்தரம் | 27 – 28 |
| சான்றோர் மகிமை | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 29 – 30 |
| அன்பே சிவம் | கு. சிவபாலராஜா | 31 – 37 |
| சித்த சுத்தி | சு. இலங்கநாயகம் | 38 – 39 |
| சிவ புராணங்கள்... | செ. சிவபாதம் | 40 – 42 |
| விரோதங்களைக் களையும்... | கே.எஸ் சிவஞானராஜா | 43 – 47 |
| அஞ்ஞான இருளை நீக்க... | திருமதி ந. பரமேஸ்வரி | – 48 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# பங்குனி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் பங்குனி மாத இதழுக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும் சமூக சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவருமான திரு வ. கணேச மூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள்.

மலரின் வளர்ச்சியானது ஒரு அபரிமிதமானதாகக் காணப்படுகின்றது. இது போற்றுதற்குரியது. ஏனெனில் எந்தவித விளம்பரங்களுமற்ற நிலையில் ஒரு ஆன்மீகம் சார்ந்த ஒரு மலர் 314 மாத காலம் தொடராக வெளிவருவது என்பது வியப்புக்குரிய விடயமாகவே கணிக்கவேண்டியுள்ளது. இவற்றுடன் மலருக்குரிய பெறுமதிகூட ஆரம்ப காலத்தில் உள்ளது போலவே இன்றும் நடைமுறைப்படுத்தி வருவது ஒரு சாதனையாகவே கருதவேண்டியுள்ளது. இவ்வகையான அடிப்படையில் இம் மலரின் வெளியீட்டினை காத்திரமாக நடைமுறைப்படுத்துவது ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனின் பேரருள் என்றே கூறவேண்டும். சந்நிதியான் ஆச்சிரமம் பலவிதமான அறப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டாலும் இம் மலரின் வளர்ச்சிக்கு முழுமையான செயற்பாட்டை வழங்கிக்கொண்டிருப்பதனால்தான் மலர் வெளியீடு இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. நாமும் இம் மலர் வெளியீட்டின் காரணமாக வருடம் ஒருமுறை சந்நிதி வேலவனின் அருளோடு கூடிய இம் மலர் வெளியீட்டில் பங்குபற்றுவது வேலவனது பேரருளும் ஆச்சிரமம் சார்ந்தோரின் தன்னலமற்ற அன்புமே காரணம் என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

ஞானச்சுடர் 315ஆவது பங்குனி மாத இதழுக்குரிய மதிப்பீட்டுரையினை ஆசிரியராகிய திரு நி. பாபுதரன் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தமது உரையின் மூலம் ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளையும் வியந்து கூறியதுடன் அவற்றுள் எல்லாவற்றிலும் பார்க்க சந்நிதியான் ஆச்சிரமம் தற்கால மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக குறிப்பாக பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாதாந்த நிதி உதவி வழங்குவது யாவராலும் போற்றத்தக்க ஒரு விடயமாகவே அமைகின்றது.

அதற்கு அடுத்ததாக இம் மலர் வெளியீடு ஒரு காத்திரமான செயற்பாடாகவே அமைந்துள்ளது. 315 மாதம் வெளிவந்த ஞானச்சுடர் மலர்களின் பலவித கருத்துக்களுடன் கூடிய ஆக்கங்கள் வெளிவந்தாலும் ஆக்கங்களை எழுதுவோரை கனம் பண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வானது பலமுறை இங்கே அரங்கேறியுள்ள விடயம் வேறு எங்கும் காணமுடியாது. சிறியோர் பெரியோர் என்ற வேறுபாடின்றி அனைவரையும் சமமாக மதித்து அவர்களது ஆக்கங்களை மலரில் இடம்பெறச் செய்து அவர்களது ஆன்மீகம் சார்ந்த எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு ஒரு உந்துசக்தியாகவே விளங்குகின்றது.

இம் மாத மலரில்கூட பலவித இளம் சமூகத்தினரின் ஆக்கங்கள் இடம் பெற்றிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. வருங் காலத்தில் இவ்வகை ஆக்கங்களை எழுதுவோர் மிகச் சிறந்து விளங்குவார்கள் என்பது உண்மை என்று கூறி, மலரில் இடம்பெற்ற ஒருசில கட்டுரைகளின் தன்மைபற்றி சபையில் இருந்தோருக்கு எடுத்துக்கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

## நீங்கா நினைவில்....



இளைப்பாறிய கிராம சேவையாளரும் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பிலிருந்து ஆச்சிரமம் ஆற்றும் பலவித மான சமய சமூகப் பணிகளுக்கு தன்னாலான ஆதரவை வழங்கியதோடு ஆச்சிரம பேரவை யின் செயற்பாட்டிற்கு பிரதம ஆலோசகராக விளங்கிய சி. சிவபாலசிங்கம் அவர்கள் 10.04.2024 புதன்கிழமையன்று அமரரான செய்தி கேட்டு மிகுந்த மனத் துயரடைகின்றோம்.

அமரர் கிராம சேவையாளராக கடமை ஆற்றிய காலங்களில் கால நேரம் பாராது பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை அறிந்து உடனுக்குடன் செயலாற்றுவதில் செயல்வீரராக மிளிர்ந்தார்.

பேரவையினால் வெளியீடு செய்யப் பட்டுவரும் மாதாந்த ஞானச்சுடர் மலருக்கு காத்திரமான வெளியீட்டுரை வழங்குவதிலும் தன்னிகரற்று விளங்கிய அன்பர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சந்நிதி வேலவனை வேண்டிப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

## கலாபூஷணம் அம்பலவாணர் ஜெயராமன்

சிறந்த இசைக் கலைஞராகவும் வயலின் வித்துவானாகவும் விளங்கிய அ. ஜெயராமன் அவர்கள் 08.04.2024 திங்கட்கிழமை இறைவனின் பாதாரவிந்தங்களை அடைந்ததையிட்டு இசை உலகம் ஆறாத் துயரில் ஆழ்ந்துள்ளது

அமரர் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையுடன் கடந்த பல வருடங்களாக இணைந்து பேரவையினால் ஆற்றப்பட்டு வரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் பங்குபற்றி அந் நிகழ்வை தனது வயலீன் இசை மூலம் சிறப்பிக்கச் செய்த ஒரு பண்பாளர் ஆவார்.



மாதத்தில் நடைபெறும் ஒரு வார வெள்ளி நிகழ்வில் சிறியோர் பெரியோர் என்ற பாகுபாடில்லாது இசை நிகழ்வை வழங்கும் இன்னிசையாளர்களை அழைத்துவந்து ஆச்சிரம மண்டபத்தில் அவர்களது திறமையை வெளிக்கொணர்வதில் ஒரு சாதனையாளராகவே கணிக்க முடியும். அவ்வகையை நோக்குமிடத்து பல விதமான இளம் பாடகர்களை அழைத்துவந்து தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வாராந்த நிகழ்வுகளை மெருகேற்றிய பெருமகன். இச் செயற்பாட்டின் நிமித்தம் ஆச்சிரம மேடையில் பல சமயங்களில் கௌரவிக்கப்பட்ட ஒரு அன்பர் ஆவார்.

அவர் இசைக்கு ஆற்றிய பணியின்மூலம் இசையையும் வளர்த்து அதனூடாக தனது திறமையையும் மெருகேற்றியதோடு இளம் இன்னிசையாளர்களையும் வளர்த்த ஒரு வயலின் இசை ஆசானாகவே கருதவேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)

**நா. குகன்**
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

**பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)

**இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுன்னாகம்)

**திருமதி ஸ்ரீனிவாசன்**
(பழம்றோட், கந்தர்மடம்)

**Dr R. பாக்கியநாதன்**
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)

**திருமதி T. ராமச்சந்திரன்**
(யாழ்ப்பாணம்)

**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)

**செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்**
(யாழ்ப்பாணம்)

**வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**ச. மனோகரி**
(சுண்ணாகம்)

**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)

**செ. மகேஸ்வரன்**
(கோப்பாய் வடக்கு)

**செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழில்மதி ஜெயானந்தன்**
(அச்சுவேலி)

**ந. இந்திரகுமார்**
(அச்சுவேலி)

**சு. பாலச்சந்திரன்**
(மருதனார்மடம், இணுவில்)

**சு. வித்தியா**
(புத்தூர்)

**த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)

**க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)

**வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)

**க.கு. கிருபாகரராசா**
(பிரதானவீதி, ஆவரங்கால்)

**இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)

**சி. நந்தகுமார்**
(வங்கி முகாமையாளர், நெல்லியடி)

**சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)

**வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)

**சி. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)

**தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**T. இரவீந்திரதாஸ்**
(சாமியன் அரசடி, கரவெட்டி)

**அ. லோகநாதன்**
(மல்லாகம்)

**உரிமையாளர்**
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. ஞானச்சந்திரன்

(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)

க. ஐங்கரன்

(புலோலி)

இ. ஸ்ரீஸ்கந்தராம்

(உப தபாலதிபர், உரும்பராய்)

K. இராமச்சந்திரன்

(சங்கானை)

த. இராஜசிங்கம்

(நீர்வேலி)

ம. புலேந்திரன்

(கரணவாய், கரவெட்டி)

கி. தவராசா

(காந்தியூர், புலோலி)

ஐ. சத்தியபாலன்

(பலாலி வீதி, உரும்பராய்)

க. இராஜேஸ்வரி

(சுண்ணாகம்)

செ. ஸ்ரீனிவாசன்

(அல்வாய்)

ஜெயகாந் மாதுமை

(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)

சுப்பிரமணியம் சுரேஸ்குமார்

(மயிலணி வீதி, சுண்ணாகம்)

க. கணேசதேவா

(மாதகல்)

அதிபர்

(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)

வி. செல்வரெத்தினம் J.P

(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)

ஐ. குகேந்திரராணி

(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)

செ. மயூரன்

(புன்னாலைக்கட்டுவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம. கந்தையா**
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
**க. மகேந்திரன்**
(சங்கத்தானை, சாவகச்சேரி)
**தங்கராசா கலாஜோதி**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**செல்வி பாலாம்பிகை கந்தசாமி**
(கட்டைவேலி, கரவெட்டி)
**S. தங்கேஸ்வராசா**
(காட்டுப்புலம்)
**ம. சிவானந்தம்**
(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)
**எஸ்.ரி. குமரன்**
(மல்லாகம்)
**பொ. காசிலிங்கம்**
(கொக்குவில்)
**கா. செல்லத்துரை**
(உடுவில், சுண்ணாகம்)
**வீ. புஸ்பநாதன்**
(உரும்பராய் வடக்கு)
**சந்திரசேகரம் மகிந்தன்**
(சிறுப்பிட்டி மேற்கு)
**தர்சினி பகீரதன்**
(உப தபாலதிபர், நீர்வேலி)
**கு. குணரூபன்**
(மீசாலை கிழக்கு)
**வ. ஆறுமுகம்**
(இளை. அதிபர், ஆவரங்கால்)
**கி. வரதராசன்**
(அச்சுவேலி தெற்கு)
**அ. சந்திரகுமாரன்**
(சந்திரகோட்டம், சுழிபுரம்)
**வி. நாகம்மா**
(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)
**சர்மிளா இராசலிங்கம்**
(கோப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜப்பெருமான்

– *திரு குமாரசாமி சோமசுந்தரம்* அவர்கள் –

சைவர்களால் கோயில் என்று அழைக்கப்படுவது சிதம்பரம். அங்கு ஸ்ரீ நடராசப் பெருமான் இடைவிடாது திருநடனஞ் செய்துகொண்டிருக்கிறார். அத் திருநடனமே இந்த உலகமும் அண்ட சராசரங்களும் இயங்கிக்கொண்டிருப்பதற்குக் காரணம் உலக இயக்கம் நின்றுவிடக்கூடாது; இயற்கை ஒழுங்கு சீர்கெட்டுவிடக்கூடாது என்பதற்காக, எம்பெருமான் ஆடவல்லான் தில்லையில் கனகசபையில் சதா ஆடிக்கொண்டிருக்கிறான்.

*"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்*
*இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"*

அப்பர் சுவாமிகள், இவ்வாறு ஸ்ரீ நடராஜப் பெருமானின் தெய்வீகப் பொலிவையும் ஆனந்த நடனத்தையும் கண்ணாகக் கண்டு வருணிக்கிறார்.



திருவெம்பாவை உற்சவம் சிறப்பாக நடைபெறுவது சிதம்பரத்திலேயாகும். திருவெம்பாவை பாடிய வாயால் திருக்கோவையும் பாடி, மாணிக்கவாசக சுவாமிகள் சாயுச்சிய முத்தியடைந்த திருத்தலம் சிதம்பரம். திருவெம்பாவைக் காலத்தில் சிதம்பரம் சென்று தரிசனம் செய்தல் சிறப்பானது. அது எல்லோருக்கும் இயலக்கூடியதன்று. அதனால் தாம் வாழும் பிரதேசங்களிலுள்ள திருக்கோயில்களுக்குச் சென்று சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை உள்ளன்போடு வழிபாடு செய்யலாம். திருவருள் சித்திக்கும்.

எமது உள்ளத் தாமரையில் ஸ்ரீ நடராஜப் பெருமான் சதா ஆனந்த நிருத்தஞ் செய்து கொண்டிருக்கிறார். எமது உள்ளம் சித்தாகாசம் ஆகும். இதனை உணரும் பக்குவம் பெற்றவர் தம் உள்ளத்திலே நடராஜ தரிசனம் காணலாம்; கண்டு சதா ஆனந்தத்தில் திளைக்கலாம். இத்தகைய பக்குவத்தை எவ்வாறு அடையலாம் என்ற கேள்வி எழுகிறது. மனம் வைத்தால் அது மிகச் சுலபம். ஒன்று இறைவன் திருவருள் வேண்டும். அடுத்தது மனத்தில் தூய்மை வேண்டும். தூய்மை எவ்வாறு எய்தப்படலாம்.

*மனிதனின் மனக் கோணலை நேராக்கி நல்வழிப்படுத்துவதே நல்ல நூல்களின் பயனாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக்காறு, அவா, வெகுளி, அகந்தை, மமதை, ஒவ்வாத சிந்தனைகள், காமம் முதலிய மாசுக்களை மனத்திலிருந்து அகற்றிவிட்டால் மனந்தூய்மை எய்தப்பெற்றுவிடும்.

உள்ளத்தை மறைத்துக்கொண்டிருக்கும் இந்த இருள் திரை விலகியதும், உள்ளே நடராஜப்பெருமானின் திருநடனத் தோற்றம் பட்டவர்த்தனமாக நமக்குத் தெரிகிறது.

சிதம்பரத்திலே ஞானசபையிலே; சிவபெருமான், சிவகாமி அம்மையார் காண, ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அனவரதமும் ஆனந்தத் தாண்டவம் செய்யும் அற்புதக் காட்சியை அப்படியே உள்ளத்திலும் காண்கின்றோம்.

கோடி சூரியருடைய ஒளிப்பிரகாசம் தவழும் பொன்னார் திருமேனியும், புன்முறுவலோடு கூடிய ஒரு திருமுகமும்; முக்கண்ணும்; கங்கையும் பிறையுங் கொன்றை மாலையுந் தாங்கிப் பரந்து விரிந்த திருச்சடையும்; வலது திருச்செவியில் குண்டலமும், இடது திருச் செவியில் திருத்தோடும்; திருநீலகண்டமும்; டமருகம் பொருந்திய திருக்கரம், அபயகரம், அக்கினியகல் ஏந்திய திருக்கரம், டோளகரம் ஆகிய நான்கு கரங்களும்; புலித்தோலை ஆடையாகக் கொண்ட திரு அரையும்; முயலகன்மீது ஊன்றிய வலது திருப்பாதமும்; தூக்கிய இடது திருவடியும் கொண்டிலங்கும் அழகுத் திருக்காட்சியாக, ஆடல் அரசனின் திருக்கோலம் அமைகிறது. அருகே சிவகாமியம்மையார், பச்சைமேனியும் திருக்கழுத்திலே பொருந்திய திருமங்கல சூத்திரமும்; செங்கழுநீர் மலர்பிடித்த வலது திருக்கரமும், கடிக்கீழ்த் தொங்கவிட்ட இடது திருக்கரமும் மிக ஒடுங்கிய திருநிலையும் உடையராய் காட்சியளிக்கிறார். இத் தெய்வீகக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டு களிக்கத்தான் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்று அவாவி நிற்கின்றோம்.

தேவர்களுக்கும் வேறு கணங்களுக்கும் கிடைக்கப்பெறாத தில்லைக் காட்சி, மனிதப் பிறவி எடுத்தவர்களுக்குத்தான் கிடைக்கப்பெறுகிறதென்றால், மனிதப் பிறவியின் அருமையும் பெருமையும் தான் என்னே! நமக்குக் கிடைத்த இம் மனிதப் பிறவியை நாம் துஷ்பிரயோகம் செய்தல் கூடாது. கிடைத்த அரிய வாய்ப்பினை நழுவவிடல் விவேகம் ஆகாது. பிறவியின் நோக்கத்தை அறிந்து, நாம் எதற்காக இங்கு வந்தோமோ, வந்த வேலையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாதுமறியாதவர்கள் நாம்.

காரைக்காலம்மையார், வியாக்கிரபாதர், பதஞ்சலி, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் முதலிய பல அநுபூதிமான்கள் நடேசப் பெருமானுடைய ஆனந்த நடனத்தை நேரில் தரிசித்து, துதித்து சிவானந்தப் பெருவாழ்வு பெற்றவர்கள். நாமும் தூயமனத்தினராய் ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவடிகளை வணங்கித் துதித்து உய்வு பெறுவோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

---

*ஒவ்வொரு மனிதனும் தனது சக்திக்கேற்ப தியாகம் செய்து சக மனிதர்களுக்கு உதவ முயற்சி செய்யவேண்டும். அடுத்தவருக்காக மனம் இளகும்பொழுது அதனை அவர்களுக்கு பயன்படும் வகையில் வெளிப்படுத்த வேண்டும். அதுதான் மனிதனாகப் பிறவி எடுத்த பயன்.*

***திறமையும் நம்பிக்கையும் வெல்லற்கரிய படைகளாகும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் திருவும்

– திரு கு. குணாளன் அவர்கள் –

இந்து மதத்தவரின் கடவுள் கொள்கை முற்றிலும் மனித வாழ்க்கையை ஒட்டியதே ஆகும். குடும்ப வாழ்க்கையின் பிரிவுகளை தெய்வ அம்சங்களாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. எமது சமுதாயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவனுக்கு பார்வதிதேவி என்ற இல்லாள் உண்டென்றும் முருகன், பிள்ளையார் ஆகிய சற்புத்திரர்கள் உண்டெனவும் ஒரு குடும்பத்தை எடுத்துக்காட்டி உள்ளனர். சிவனது ஒவ்வொரு அவதாரத்திலும் சக்தியும் அவதாரம் செய்து கணவன் மனைவி ஆகின்றனர்.

சிவன் சொக்கநாதன் எனப் பெயர் பெற்றால் சக்தி மீனாட்சி ஆகிறாள். சிவன் ஏகாம்பேஸ்வரர் ஆனால் சக்தி காமாட்சி ஆகிறாள். அப்படியாக இறைவனும் இறைவியும் பெயர்களைப் பெறுகின்றனர். இதுபோலவே வைஸ்ணவ மதத்திலும் திருமாலும் திருமகளும் ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு நாமங்களைப் பெறுகின்றனர். திருமால் கண்ணன் ஆனால் திருமகள் ருக்மணி ஆகிறாள். திருமால் வேங்கடத்தான் ஆனால் திருமகள் அலமேலு ஆகிறாள். சைவர்கள் சிவனையும் வைஸ்ணவர்கள் திருமாலையும் தந்தையாகக் கொண்டு இயங்குகின்றனர். சைவர்களும் வைஸ்ணவர்களும் சம்பந்திகளே. சைவ வைஸ்ணவ தகராறு என்பது சம்பந்திகள் தகராறே ஆகும். திருமாலின் தங்கையைத்தான் சிவன் திருமணம் புரிந்துகொண்டார். இவ்வாறு படைத்தல் தொழிலைப் புரியும் பிரம்மதேவனுக்கு கல்விக்கு அதிபதியான சரஸ்வதி, இந்திரனுக்கு இந்திராணி அழகன் முருகனுக்கு தெய்வயானை, வள்ளி என இரு பத்தினிகளும் உள்ளனர். பிள்ளையார் மட்டுமே பிரமச்சாரியாக உள்ளார். இப்படியாக கடவுளர்க்கும் குடும்பங்களை ஏன் வகுத்தார்கள். கடவுளும் லௌகீகத்துக்கு தப்பவில்லை என்பதை எடுத்துக்காட்டவே.

இந்துமதம் லௌகீகத்தையே முதற்படியாக கொள்கிறது. துறவை இரண்டாம் படியாகவே கருதுகிறது. மனித குடும்பங்களில் கணவன் மனைவி பிரச்சினைகள் எவ்வாறு உருவாகிறதோ அதுபோல் சிவனுக்கும் சக்திக்கும் பிரச்சனைகள் வந்ததாகப் புராணக் கதைகள் பல கூறுகின்றன. எமது குடும்பங்களில் என்னென்ன காரணங்களுக்காகப் பிரச்சனை கள் உருவாகின்றனவோ அதே காரணங்களுக்காகத்தான் கடவுள் குடும்பங்களிலும் பிரச்சனைகள் தோன்றி இருக்கின்றன. இவற்றைக் கேட்கின்ற வேறு நாட்டவர்க்கு வியப்பாகவும், ஆச்சரியமாகவும் இருக்கின்றன. உலகில் உள்ள வேறு எந்த ஒரு மதமும் இறைவனை கணவன், மனைவியாகக் கண்டதில்லை. இந்து மதமானது வெறும் சந்நியாசிகளுக்கும், வாழ்க்கையைக் கண்டு பயந்தவர்களுக்கும் அடைக்கலம் கொடுப்பதல்ல. அதுபோலவே மனித வாழ்விலும் நாகரிகம், கலைகள், கலாசாரம் அனைத்தையுமே எதிரொலிக்கிறது.

*சட்டம் கெடுத்தாலும் பழக்கவழக்கம் வாழ வைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் எத்தனை கோணங்களுண்டோ அத்தனை கோணங்களும் இந்து மதக் கொள்கைகளிலும் உள்ளன. கல்வி பற்றியும், கல்லாமை பற்றியும் கதைகள் உள்ளன. கல்விக்கு அதிபதி சரஸ்வதி செல்வத்துக்கு அதிபதி இலக்குமி என்றெல்லாம் வாழ்க்கைத் தேவைக்கும் கடவுள்களை வைத்துள்ளது. இந்துமதம் கலைகளைக்கூட தன் வழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொண்டது. இறைவன் நடனமாடியதாக இந்துமதம் தவிர்ந்த வேறு எந்த மதத்திலாவது உண்டா? சரஸ்வதி வீணை மீட்டுகிறாள் நாரதர் தம்புரா மீட்டுகிறார். நந்தி மிருதங்கம் கொட்டுகிறது. நடராசர் நடனம் புரிகிறார். இப்படியாக மனிதர்களின் ஆசைகளுக்கும் உல்லாசப்பொழுது போக்குகளுக்குக்கூட இந்து மதம் வழிசமைத்துள்ளது.

போர் புரிவது பற்றியும், தூது செல்வது பற்றியும் கதைகள் உள்ளன. ஏன் சமாதானம், பேரம்பேசுவது கடன் வாங்குவது, பொய் கூறாமல் இருப்பது பற்றியும் கதைகள் உள்ளன. இப்படியாக ஒவ்வொரு தலைப்புக்களுக்கும் பல கதைகள் உண்டு. இந்து மதத்தின் மூல நோக்கம் வாழ்க்கையின் சகல பகுதிகளையும் சுட்டிக்காட்டுவதே ஆகும்.

தெய்வப்புலவரின் குறள் எப்படிப் போகின்ற பக்கமெல்லாம் எதிர் ஒலிக்கின்றதோ, ஒவ்வொரு அனுபவத்திலும் ஓடிவந்து நிற்கின்றதோ அதுபோல் புராணக் கதைகளும் வந்து நிற்கின்றன. அந்தக் காலமே இந்துக்கள் விஞ்ஞான ரீதியாகவும் சிந்தித்துள்ளார்கள். ஆம் அதுதான் வானில் பறக்கும் புஸ்பக விமானத்தை அறிமுகம் செய்தார்கள். கடல் நீரை முகில்மூலம் மேகம் உட்கொண்டு மழையாகப் பொழிவதை அன்றே சொல்லிவிட்டார்கள். புவி சுழழுதல், கிரகணங்கள் தோன்றுதல் போன்றவற்றையும் தத்துவமாகச் சொன்னார்கள்.

நட்சத்திரங்கள் பற்றியும் எழுதி வைத்துள்ளனர். சந்திர மண்டலம், செவ்வாய்க்கிரகம் என்பன புவியில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளன என்பதையும் எப்பொழுதோ சொல்லிவிட்டனர். இந்துக்களின் விஞ்ஞான அறிவு மிகவும் அற்புதமானது. இராமாயணம் மகாபாரதம் ஆகிய போர்களில் வரும் அஸ்திரங்களின் அடிப்படையைக் கொண்டே தற்போதைய நவீன சுடுகலன்களை மேலை நாட்டினர் தயாரித்தனரோ என எண்ணத் தோன்றுகின்றது.

ஆரம்ப காலத்தில் இந்து மதத்தில் பல தெய்வ வணக்கங்கள் இருந்து வந்துள்ளன. சூரிய வணக்கம் அவற்றுள் முக்கியமானது. எமது மதத்தில் காலத்துக்குக் காலம் புதிய புதிய தத்துவங்கள் தோன்றி உள்ளன. இந்து மதமானது நீண்டகால மதமானதால் ஆண்டுக்கு ஆண்டு பக்குவப்பட்டு இன்று அது தழைத்து பெரு விருட்சமாக பூத்துக் குலுங்குகின்றது. மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தால் பல பண்டிகைகள் அதன் கருத்துக்கள் மூலம் எம்மை மதத்துடன் அறிவுபூர்வமாக இணைத்து வைத்துள்ளது. நாம் சரஸ்வதி பூசை, ஆயுத பூசை செய்கிறோம். சரஸ்வதியையும், மகாலட்சுமியையும் அதாவது அறிவையும், செல்வத்தையும் வணங்குகிறோம். அறிவும் செல்வமும்தான் வாழ்க்கை. திருப்பாற்கடலில் தேவர்கள் அமுதம் கடைகிறபோது கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தோன்றினாள் என்பது ஐதீகக் கதை. சரஸ்வதி கல்வி, கலைகளுக்கு தலைவி. அமுதம் கடைந்தபோது தோன்றினாள் என்று ஏன் கூறினார்கள்? உள்ளத்தை அறிவால் தோண்டி எடுக்கும்போது வாழ்க்கை சிறக்கின்றது. கலைக்கு முக்கியம் தெய்வ வழிபாடு செய்து தொடங்குவது. அதுவே கலைமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கையில் உள்ள ஜெபமாலை மறுகையில் வைத்திருக்கும் ஏடு கல்வியின் வடிவம். வீணை நாத வடிவம். உடை வெள்ளை. ஆசனம் வெண்தாமரைப்பூ. கல்வியும் கலையும் வளர்வதற்கு இவையே மிகவும் முக்கியமானவை. கல்வியும் கலையும் எமக்குக் கிடைக்க வேண்டுமாயின் எமது உள்ளமானது சூது, வாது இல்லாத வெள்ளை உள்ளமாக வைத்திருக்க நாம் ஒவ்வொருவரும் இறைவன்மீது பற்றுவைக்க வேண்டும். தூய்மையான உள்ளத்தில் இறைவன் குடிகொள்வான் என்பது இந்துமதக் கொள்கை. மன்னன் கட்டிய பெருங் கோயிலுக்குச் செல்லாது ஏழையாகிய பூசலார் என்ற அடியவர் உள்ளத்தில் அமைத்த கோவிலுக்குச் சென்று எழுந்தருளினார் என்பது புராண வரலாறு. எனவே நாம் அனைவரும் எமது உள்ளத்தை அழுக்காறு, அவா, வெகுளி இல்லாத தூய்மையான இடமாகப் பேணி வந்தால் இறைவன் எம் மனதிலும் குடிகொள்வான் என்பதற்கு சந்தேகமே இல்லை.

அதுபோல் செல்வத்துக்கு அதிபதியாகிய திருமகள் வாழ்க்கைக்கு கல்வி மட்டும் போதாது. பொருளும் வேண்டும் என்பதற்கு அமைய தனது பேராற்றல்மூலம் எல்லா இடமும் வியாபித்து அருளாட்சி செலுத்துபவள். ஒட்டுமொத்தமாக உற்றுநோக்குமிடத்து மனித வாழ்வின் குறிக்கோளை இந்துமதமே பூர்த்தி செய்கிறது. இந்து மதத் தத்துவங்கள் கல்வெட்டுக்கள், ஓலைச் சுவடிகள், திருமுறை ஏடுகள் போன்றவற்றை அறிவுடையோர் மதிப்பர். திருவுடையோர் அதற்கு நன்றி கூறுவர்.

மனித வாழ்வில் அறிவும், திருவும் எமது இரு கண்கள் போன்றவை. இரு கண்கள் எமக்கு எவ்வளவு முக்கியமோ அதுபோலவே எமது வாழ்க்கையில் அறிவும் திருவும் முக்கியத்துவம் பெறுகின்றது. மனித சமுதாயத்தில் இவை இரண்டும் ஒருங்கே அமைந்தால் வாழ்வு பூரணத்துவம் அடைகின்றது.

## உனைப் பற்றிவிட்டாலே போதும் முருகா

உன்னை என்று நான்காண் பேனோ வேல் முருகா
எனை நின்று ஆள்கின்றாயே தயாபரனே குமரா
பொன்னை நம்பிப் பொருளை நம்பி இங்கு வாழ்வில்லை
பக்தி பெருக வேண்டும் இதுவே நல்ல பேரின்பம்
மண்ணை நம்பி வாழ்வதுவோ சிலகாலம் - மானிடம்
மரணம் என்ற போது வருமே பல காலம்
பண்ணும் புண்ணிய பாவம் அதுவேவந்து சேரும்
பயனை அடைய பற்றுவோம் முருகன் திருப்பாதம்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 12

(தொடர்ச்சி...

## கடவுளும் பிரபஞ்சமும்

- திரு பூ. சோதிநாதன் அவர்கள் -

### 01) சுய இணைப்பின் நிறைவு

கீதையின் ஏழாவது அத்தியாயத்துக்கு வந்ததும் நாம் இருப்பின் ஒரு புதிய பரிணாமத்தை தொடக்கூடியவர்கள் ஆகின்றோம். முன்னுள்ள கீதையின் ஆறு அத்தியாயங்களிலும் எமக்கு வழங்கப்பெற்று வந்த முழுப்பார்வையும் ஏழாவது அத்தியாயத்தில் திடீரென மாறுகிறது. நாடகப் பாணியில் கூறுவதாயின் காட்சியை மாற்றுவதற்காக ஒரு திரை நீக்கப்பெறுவதுபோல அது அமைகிறது. இங்கு படைப்புத் தலைவனை ஆன்ம சாதகனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெறுவதைக் காணலாம். இந்த விடயம் கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களிலும் அழுத்திக் கூறப்படுவன. தனி மனிதன், அவனது கடமை, அவனது உடல் - உளச் சிக்கலை ஒன்றிணைப்பது என்பவையே. அந்த ஆறு அத்தியாயங்களிலும் அவனுக்கு ஒரு கண்டனம் வழங்கப்பெற்று வந்திருக்கின்றது. உயர் விழுமியங்களை அடைந்து கொள்வதற்கான ஆவலுள்ளவன் அவன் என்ற கருத்திலேயே அவனுக்கு அக் கண்டனம் வழங்கப்பெற்று வந்திருக்கின்றது. அதன்மூலம் நாம் கீதையின் ஆறாவது அத்தியாயத்தின் விடயத்தை அடையும்போது சுய இணைப்பு வேலை நிறைவு பெறுகின்றது. அங்கு நாம் அதனையும் கடந்து அப்பாலும் செல்லக்கூடிய ஒரு தயார் நிலையில் வைக்கப்பெறுகின்றோம்.

### 02) பிரபஞ்ச இணக்கம்

கீதையின் ஏழாவது அத்தியாயத்தில் திடீரென அச் சாதகன் பிரபஞ்சத்தோடு தன்னை இணங்கிக்கொள்ளுமாறு ஆக்கப்பெறுகின்றான். இந்தப் பகுதி ஆரம்பிக்கும்போதே அந்த நிலை அவனுக்கு ஒரு பெரும் ஆசியெனப் பகவான் கூறுகின்றார். அத்துடன் இந்த உலகில் ஒரு சிலர் மட்டுமே இத் தெய்வீக ஆசியைப் பெற்றுக்கொள்ளும் தகுதி உடையவர்களாக இருக்கமுடியும். அந்த ஆசி கடவுளின் அன்பே. அந்த ஆசி ஒருவர் கடவுளை நோக்கி முற்றாகத் தன்னைத் தயார் செய்துகொள்ள வைக்கின்றது. ஒவ்வொருவரும் தனது மனத்தில் பூரணத்துவத்தின் கருத்தைக்கூடக் கொண்டிருப்பதில்லை. அப்பூரணத்துவத்தோடு மட்டும் தொடர்புகொண்டு அதன் அநுபவத்தை எல்லோரும் பெறவேண்டும். பூரணத்துவம் பற்றிய கருத்தையேனும் அநுபவிப்பது ஒரு பெரிய சாதனை ஆகும். எம்மில் எவரேனும்

*உள்ளத்தின் சிறந்த நலன்களை நாடுங்கள். மற்றவை தாமாக வந்து சேரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான இருப்பின் தன்மையையும் அதன் அடுக்கமைப்பையும் தனது மனத்தில் கொள்ள முடியுமாயின் உண்மையில் அது பெரும் சாதனையே. யோகப் பயிற்சியின் ஒரு பேறாகவே அதனைக் கருதலாம். ஆரம்பக் கட்டத்திலேனும் கடவுளுக்காகக் கொள்ளும் பூரண ஆவல் வெறும் வார்த்தை அறிவு, விவேக அறிவு, ஆன்மிக நூலைக் கற்றுவரும் அறிவு என்பவற்றைக் காட்டிலும் மேலானது.

## 03) பேரானந்தம்

மிகச் சிலர் மட்டுமே கடவுளை நாடக்கூடியவர்களாக இருக்கின்றனர். பெரும்பாலான மனிதர்கள் புலன் பொருள்களின் பக்கமே திசை திருப்பம் பெறுகிறார்கள். அம் மனிதர்கள் புலன் அநுபவங்களின் திருப்தியையும், உடல் திருப்தியையும், சுயநலத் திருப்தியையுமே தேடுகின்றனர். சாதாரண மனிதர்கள் கடவுளின் பேரானந்தத்துக்குக் கருத்துச் செலுத்து வதில்லை. அப் பேரின்பத்தைக்கூடச் சிந்திப்பதற்கும் அவர்களால் முடிவதில்லை. கடவுளின் உண்மைத் தன்மையை உணர்ந்து அதன் பக்கம் திரும்ப வேண்டும் என்ற மன ஆற்றல் பலரிடம் இருப்பதில்லை. ஆனால் கடவுளை அடையவேண்டும் என்ற உண்மை விருப்பம் உள்ளவர்களுள்ளும் அம் முயற்சியில் வெற்றி பெறுகின்றவர் மிகச் சிலரே. உடலோடு இருந்துகொண்டு எல்லைக்குட்பட்ட மன அநுபவங்களோடு கூடிய மனிதர்களைப் பொறுத்த வரையில் இந்த ஆன்மீகப் பாதையின் வெற்றி மிகக் கடினமானதாகவே உள்ளது. இதனாலேதான் இறைவனிடம் விண்ணப்பிக்கும் மனிதனையும் கடவுள் தெரிவுசெய்வதில்லை எனக் கருதுவது தவறாகும். இந்த அக்கறையோடு கூடிய அறிமுகத்துடன் கீதாசிரியர் பிரபஞ்சத்தின் ஒரு வரைபடத்துக்கு எம்மை அழைத்துச் சென்று அதனை ஒரு சில வார்த்தைகளிலே தெளிவாக விளக்குகின்றார்.

## 04) பிரபஞ்ச உணர்வு

இந்தப் பிரபஞ்சமானது ஐம்பூதங்களையும், பிரபஞ்ச உணர்வின் சில அம்சங்களையும் அடக்கி உள்ளது. நிலம், நீர், காற்று, ஆகாசம் என்ற ஐம்பூதங்களும் தூலமானவை. அவற்றைக் காட்டிலும் சூக்குமமானவை பிரபஞ்ச உணர்வின் குறித்த சில அம்சங்களான மனம், புத்தி, அகங்காரம் என்பனவாகும். அத்துடன் இங்கு பகவான் வழங்கும் போதனை சாங்கிய தத்துவ முறையினால் வழங்கப்பெறும் பிரபஞ்ச விளக்கத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. இவ்விடயத்தை முன்னரும் பார்த்திருக்கின்றோம். நாம் அவதானிக்கக்கூடிய உண்மையின் மிகக் கீழ்மட்டத்தில் இவை உள்ளன. திடப்பொருள்களாக உள்ள இவை புவித்தளத்தில் உள்ள மகா பூதங்களான ஐம்பூதங்கள் ஆகும். புலன்களினால் உணரக்கூடிய எதுவும் திடப்பொருளே. ஐந்து பூதங்களும் நாம் கேள்விப்பட்டிருப்பதுபோல வித்தியாசமான தனித்தனிப் பொருள்கள் அல்ல. இவை பிரபஞ்சப் பொருளின் அடர்த்தியில் ஐந்து வேறு அளவுகளில் ஒன்றைக் கொண்டன. இதனால் ஒன்றில் இருந்து மற்ற நான்கையும் முற்றாக வேறுபடுத்தலாம் என்பது இதன் பொருள் அன்று. சாங்கியப் பிரபஞ்ச இயலுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்தப் பிரபஞ்ச இயலுக்கும் இணங்கக் காரியத்தைக் காரணத்துள் அடக்கிவிடலாம். அதன் விளைவாக இறுதியில் எல்லாவற்றையும் அடக்கியதாக ஆகாய வெளியைக் கூறலாம்.

## 05) சூக்கும உண்மைகள்

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களும் உருவப் பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த வடிவப் பொருள்கள் ஆகும். ஆனால் தனிமனிதனது புலன்களால் அநுபவிக்க முடியாத சூக்கும உண்மைகளும் உள்ளன. தூலத்தில் இருந்து மேலும் மேலும் போகும் போது அதில் உள்ளடக்கியவற்றைக் காணமுடியாததனால் பார்த்து அறியமுடியாமல் உள்ளது. ஐம்பூதங்களைக் காட்டிலும் சூக்குமமானவை தன்மாத்திரைகள் எனச் சாங்கியம் கூறுகின்றது. அவை ஐம்பூதங்களின் சூக்கும சாராம்சங்கள் ஆகும். அவற்றைத் திடப்பொருள் களின் மின்சார உள்ளடக்கம் என்று ஓரளவுக்குக் கூறலாம். எனினும் இந்த உதாரணம் பூரணமான பொருத்தம் உடையது அன்று. எனினும் அதனைவிடத் தெளிவான உதாரணம் வேறு இருப்பதாகத் தெரியவில்லை. நாம் திடப்பொருள்களை மின்சார ஆற்றலின் அல்லது சக்தியின் ஒரு சுற்றோட்டமாக நோக்குகின்றோம். அந்தச் சக்தி பிரபஞ்சத்தின் ஏனைய பகுதிகளோடு உடன் உறைகின்றது. பிரபஞ்சத்தின் ஏனைய பகுதிகளும் அதே போன்ற சக்தி அலைகளை உடையனவாகவே இருக்கின்றன. இவ்வாறு பார்க்கும்போது திடப்பொருள் களின் தன்மை அவற்றின் முக்கியத்துவத்தை இழந்துவிடுகின்றது. எனவே சக்தியின் ஒரு தொடர்ச்சி மட்டுமே இருக்கின்றது. சாங்கியர்கள் பிரகிருதி என்று கூறும் விடயமே இது. இவ் விவரங்கள் எல்லாம் கீதைச் சுலோகங்களில் இல்லை. ஆனால் கீதை குறிப்பிடுவது இத் தத்துவங்களையே என்று உறுதியாகக் கூறலாம். ஐம்பூதங்களுக்கு மேல் தன்மாத்திரை கள் உள்ளன. அவை அந்த ஐம்பூதங்களின் சூக்கும சாராம்சங்களாக இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் பின்னால் பிரபஞ்ச சிந்தனைத் தத்துவம் இருக்கின்றது. இது எம்மால் எண்ண முடியாததும் உணர முடியாததுமான விடயம் ஆகும்.

## 06) பிரபஞ்ச மனம்

நடைமுறை நோக்கில் இருந்து பார்க்கும்போது பஞ்சபூதங்களுக்கு அப்பாலுள்ள பிரபஞ்ச உண்மையை நேரடி அநுபவமாக மட்டுமே உணரவேண்டி உள்ளது. எனவே, அது ஒருபோதும் காலம், இடம் பற்றிய விடயங்களுக்குள் வரமுடியாது. எனினும் பிரபஞ்ச மனத்தின் இருப்பை நாம் ஊகித்து அறியமுடியும். அதனைத் தற்போதய அநுபவத்தின் தரவுகளைக்கொண்டு நாம் தருக்க ரீதியாக அறியமுடியும். மனம் சில வகைகளில் பொருள் களை ஓர் எல்லைக்குள் உட்படுத்துகின்றது உண்மையாகும். ஆனால் ஒரு தனிமனிதனது மனம் பொருள்களை ஓர் எல்லைக்குள் உட்படுத்துகின்றது என்று கூறுவது முற்றும் பொருத்த மானதன்று. எனினும் ஒரு பொருளை அறிவதில் மன அடுக்கமைப்பு ஒரு பெரிய பங்களிப்பைச் செய்கின்றது என்பது உண்மையே. அதன் விளைவாக எந்தப் பொருளையும் உள்ளபடியே

*அன்பு இல்லாதவன் வாழ்க்கையில் புன்னகை, உற்சாகம் முதலியவை இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பது முடியாதென்பதைக் கூறமுடியும். எனினும் அதேவேளை எந்த ஒரு மனிதனது மனமும் அறிந்துகொள்ளும் பொருளை ஒட்டுமொத்தமாக ஓர் எல்லைக்குள் உட்படுத்துவதோ அப் பொருளின் படைப்பாளியோ அன்று. பொருளில் ஒரு வகையான உண்மைத் தன்மை உண்டு. எனினும் பொருளை அறிபவரால் அப் பொருளை ஓர் எல்லைக்குள் உட்படுத்துவது என்பது சரியன்று. அந்தப் பொருளை எல்லைக்குள் உட்படுத்துபவர் எவ்வகையானவர்? அது "எனது" மனமோ "உனது" மனமோ அன்று. அவ்வாறு அதனை எல்லைக்குள் உட்படுத்துவது ஓர் ஒட்டுமொத்த, எல்லோரதும் மனங்களையும் கடந்த விரிவான ஒரு மனமாகும். அது அளவில் மட்டுமன்றிப் பண்பிலும் எல்லா மனங்களின் கூட்டுத்தொகையையும் கடந்த ஒன்றாகும். அந்த விடயம் எமது தற்போதய ஆய்வுகளின் எல்லைக்கு வெளியே உள்ளது. (தொடரும்...

---

# நானும் ஓர் மேடையில் பேசினேன்!

உலகில் மேடையில் அதுவும் பலர் சபையை அலங்கரிக்கும் மேடையில் பேசுவதற்கு இறையருள் கைகூட வேண்டும். எனக்குக் கிட்டியது. எப்படி?

கொரோனா அலைவீசி ஓய்ந்த ஒரு வெள்ளியில் ஆச்சிரமத்தின் உள்ளே நுழைந்தபோது திருவருள்மிகு மோகனதாஸ் சுவாமிகள் "ரீச்சர் இன்று அடியார்களுக்கு நற்சிந்தனை ஒன்றை வழங்குக" என்று அருள்வாக்குக் கூறினார்.

பாடசாலையில் மாணவர்களுக்குக் காலைப் பிரார்த்தனையில் நற்சிந்தனை வழங்கிய அனுபவம் உற்சாகம் தர நானும் "உங்கள் ஆசியிருந்தால் எல்லாம் நிறைவுபெறும்" எனக் கூறி மேடை ஏறினேன். உள்ளே குலைநடுக்கம். வெளியே தெரியவில்லை. சுவாமிகளின் ஆசியுடனும் சுவாமிமலையான் ஆசியுடனும் ஏதோ, சிந்தனைகள் சீர்பெற சிறுகதைகள் மூலம் கருத்துக்கள் கூறி அமைந்தேன். இப்படி மேலும் சில வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து கருத்துக்கள் கூறச் சந்தர்ப்பம் கிடைத்தது. கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் என்னையும் ஒரு பொருட்டாக மதித்து இச் சந்தர்ப்பங்களை வழங்கியமை எனது பெற்றோர்களது ஆசியுடனான செயல் என்று கூறினால் அது மிகையாகாது. இதற்கு நன்றியோடு சைவ கலை பண்பாட்டுப் பேரவைத் தலைவர் திருவாளர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் பாதாரவிந்தங்களை வணங்கி நிற்கின்றேன்.

மற்றும் இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் கருத்துக்கள் கூறிமுடித்து பூசைக்குச் செல்லுமுன் ஓர் அடியார் வந்து "நான் எத்தனையோ பேச்சுக்கள் கேட்டிருக்கிறேன். உங்களைப்போல் எளிமையாக எல்லோர்க்கும் விளங்கக்கூடியவாறு பேசியது சிறப்பாக இருந்தது" எனக் கூறி ஆசீர்வதித்தார். தங்கப்பதக்கம் பெற்ற மகிழ்ச்சி தந்தது அது.

இதற்கெல்லாம் காரண கர்த்தாவாக அமைந்த உயர்திரு கலாநிதி மோகன் சுவாமிகளை சிரந்தாழ்த்தி வணங்கி அவரது அன்பும் ஆசியும் என்றும் கிடைக்க முருகப்பெருமானை வணங்கி நிறைவு செய்கிறேன்.

-யூ.பி. ஆனந்தம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபுகளும் திறனாய்வுகளும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

ஆன்மீகம் என்பது நம்பிக்கை சார்ந்த ஒன்று. ஆன்மீகம் நம்புகின்றவர்களுக்கு மட்டுமே உரியது. ஆனாலும் அறிவியல்களும் ஆன்மீக மூலமாகவே அறியவைக்கும் முயற்சியின் பயனாகவே மதங்கள் தோன்றின. தவிர கொள்கை கோட்பாடுகளும் ஆன்மீகம் ஊடாகவே முன்வைக்கப்பட்டன. இவ்வாறு இருந்தபோதும் பரிணாமங்களிடையே மரபுகள் அறிவியல் வளர்ச்சிப்போக்கிற்கு குறுக்கீடுகள் செய்தன. தடைகளைத் தாண்டிய முயற்சிகளும் கூட, இடம்பெற்று இருக்கின்றதென்பதை வரலாற்றுப் பதிவுகளில் இருந்து புரிந்துகொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

இவ்வாறு மரபுகளை தாண்டுகின்ற ஒரு முயற்சியாகவே கற்பனைகள் பயன்படுத்தப் பட்டன. தவிர மக்கள் பாமரர்களாக இருந்தமையும் அவர்களை திருப்திப்படுத்தும் முயற்சியாக வும் கற்பனைகள் பயன்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் திறனாய்வாளர்களால் கண்டுகொள்ளப்படும் என்ற நம்பிக்கை இவைகளை உருவாக்கியவர்களிடம் இருந்தும் இருக்கின்றது.

இங்கே திரிபுகள் அறியாமையாலும் திறனாய்வு அறிவாலும் புராண இதிகாசங்கள் மாற்றமடைந்து செல்லவும் காரணங்களாகும். உதாரணம் வால்மீகி இயற்றிய இராமாயணத்தை கம்பர் மொழி பெயர்த்தாலும், தனது ஞானத்தினால் புதுமைகள் செய்து இருக்கின்றார். இங்கே ஞானம் என்பது கல்வியறிவல்ல. மாறாக கல்வியைக்கூட ஆழ்ந்து அனுபவித்த ஞானம். தவிர தடைகளற்ற சிந்திக்கும் ஆற்றல்தான் ஞானத்திற்கு மற்றுமொரு காரணம். ஆனால் வளர்ந்து கொண்டிருக்கும் ஒன்றை தடைகள் போட்டு குறுகிய வட்டத்துக்குள் இழுத்துவிடும் முயற்சிகளின் பயன்தான் திரிபுகள்.

எவ்வாறாயினும் புராண இதிகாசங்களில் அதீத கற்பனைகள் இடம்பெற்றிருப்பதால், புராண இதிகாசங்களை பொய் என்றும் புனையப்பட்ட கற்பனைகள் என்று கூறுவோரும் உள்ளனர். தவிர புராண இதிகாசங்கள் வேற்று கிரகங்களில் இடம்பெற்றதாகவும் சொல் பவர்களும் உள்ளார்கள். உதாரணமாக அவதார் என்ற ஆங்கிலத் திரைப்படத்தில் இராமனை வேற்றுக்கிரக வாசியாகவும், இராவணனை பூமியில் வசிக்கும் மானிடனாகவும் காட்டியுள்ளனர். ஆனால் சந்திரமுகி என்ற தமிழ் திரைப்படத்தில் மெய்ஞானம் விஞ்ஞானம் இரண்டும் காட்டப்பட்டுள்ளது. தவிர இது வாழ்வியலிடையே ஆன்மீகத்தின் பங்கை காட்டுகின்றது.

ஆனாலும் எமது வாழ்வியல் அனுபவங்களில் இருந்து புராண இதிகாசங்கள் புனையப்பட்ட பொய்யுமல்ல தவிர எமது வாழ்வில் இருந்து அந்நியப்பட்டு வேற்றுக் கிரகத்தில் இடம்பெற்றதுமல்ல. மாறாக நாம் அறிவியல்களையும் அறிந்துகொள்ள வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காக கற்பனைகளுடன் கலந்து தரப்பட்டுள்ளது. இவ்வாறு தரப்பட்டாலும், புராண இதிகாசங்கள் எமது வாழ்வில் பிரதிபலிப்பதூடாக அவைகள் உண்மைகள் என்பது எந்தச் சந்தேகத்துக்கிடமுமின்றி நிருபணமாகின்றது. மேலும் அந்நியர்கள் ஆட்சிக்காலத்தில் கால்வேல்ட் என்கின்ற மேற்கத்தைய அறிஞர் ஒருவரால் முன்வைக்கப்பட்ட கருத்தியலின் அடிப்படையில் உருவானதுதான் ஆரிய திராவிட வாதமாகும். அதாவது ஆரியர்கள் ஆடு மேய்த்துக்கொண்டு கணவாய்க் கால்வாய் வழியாக வந்தவர்கள் என்றும் இவ்வாறு ஆரியர்கள் ஆடுமேய்த்துக்கொண்டு வரும்போது இங்குள்ள மக்கள் நாகரீகமடைந்த மக்களாக இருந்தார் கள் என்றும், ஆரியர்கள் புனையப்பட்ட கற்பனைகளைக் கொண்டு புராண இதிகாசங்களை உருவாக்கி இங்கிருந்த மக்களை அடிமைப்படுத்தினார்கள் என்பதும் இவரது வாதமாகும்.

இங்கே பிராமணர்கள் ஸ்ரீ கிருஷ்ணரை தமது இரட்சகராகப் போற்றுவதால், பிராமணர் கள் ஸ்ரீ கிருஷ்ணரின் வழித்தோன்றல்கள் என்று தவறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்டமையே, இவ்வாறான வாதங்களுக்கு காரணமாகும். எவ்வாறாயினும் மகாபாரதம் சந்திரவம்ச வரலாறு என்பதையும் இராமாயணம் சூரியவம்ச வரலாறு என்பதையும் இன்று நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு வரலாற்றுத் திரிபுகள், புராண இதிகாசங்களிலும் கூடவே புராண இதிகாசங்களை இயற்றியவர்கள் வரலாறுகளிலும் வரலாற்றுத் திரிபுகள் இடம்பெற்றிருக்கின்றது. இந்தவகையில் இந்தக் கட்டுரையின் நோக்கம் வரலாற்றுத் திரிபுகளை ஆய்வு செய்வதேயாகும். அறிவியல் திரிபுகள் பிறிதொரு சந்தர்ப்பத்தில் தனிக் கட்டுரைகளாக பார்க்கப்படும் ஆகவே வரலாற்றுத் திரிபுகள் முக்கியமாக இராமாயணத்தை இயற்றிய வால்மீகி முனிவரின் வரலாற்றுத் திரிபுகளை முதன்மையாக, ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வால்மீகி ஒரு கொடிய திருடனாக இருந்தவனென்றும் நாரத முனிவர் இவனை தனது தெய்வ சித்தத்தால் மனதை மாற்றி இராமாயணத்தை இயற்றத் தூண்டினார் என்ற செய்தியூடாக, நாம் அறிந்து கொள்வது என்னவென்றால் முக்காலத்தையும் அறிந்த நாரத முனிவர்தானே இராமாயணத்தை இயற்றாது வால்மீகி மூலம் இயற்றவைத்தமை, வால்மீகியே இராமாயணத்தை இயற்றுவதற்கு உரிமை உடையவன் என்பது புலனாகின்றது.

முக்கியமாக அரசர்கள் காலத்தில் நாடு மட்டுமல்ல காடும் முக்கியத்துவம் பெற்று இருந்து இருக்கின்றது. காரணம் இன்று நாடுகளிடையே இருக்கும் இறைமை அரசர்கள் காலத்தில் இருக்கவில்லை. தவிர ஐக்கிய நாடுகள் சபையும் இருக்கவில்லை. எப்போது ஒரு நாட்டின்மீது படையெடுப்பு வரும் என்பது தெரியாது. தவிர உள்ளக முரண்பாடுகளாலும் யுத்தங்கள் ஏற்படுவதுமுண்டு. இவ்வாறு ஆட்சியில் இருக்கும் அரசர்கள் யுத்தங்களில் தோல்வியுற்றால் காட்டில் தஞ்சமடைவதும் பின்னர் மீண்டும் படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றுவதும் அல்லது அரசர்களின் பிள்ளைகள் ஆட்சியைப் பிடிக்க போராடுவது அல்லது அவர்கள் சந்ததியினர் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கப் போராடுவது என அரசர்கள் காலத்தில் நாடு மட்டுமல்ல காடும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. இந்தவகையில் இராமாயணம் காட்டில் இருந்து பதிவானமையால், அழிந்துவிட்ட ஒரு வரலாற்றின் வரலாற்றுத்

*வாழ்க்கை விலை மிகுந்த ஒரு வாய்ப்பு. ஆனால் அதன் மதிப்போ வாழ்வோரைப் பொறுத்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடங்கள்தான் இராமாயணம் என்பது புலனாகின்றது. மேலும் இராமன் சூரிய வம்சத்து சத்திரீகன் என்பதாலேயே ஆரியன் என்று அழைக்கப்பட்டான். ஆகையால் ஆரியர்கள் வரலாறு அழிந்துவிட்ட ஒன்றாகவே இருந்தபோதும் தீந்துபோன பெருங்காய டப்பா வாசம் வீசுவதுபோல் ஆங்காங்கு ஆரிய எச்சங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இருக்கின்றதோ அன்றி ஆரிய வரலாறுகள் தொடர்ச்சியானது அல்ல, என்பது வால்மீகி இராமாயணத்தை இயற்றியதன்மூலம் தெளிவாகின்றது.

இங்கே முக்கிய விடயம் இராமாயணத்தை இயற்றிய வால்மீகி ஒரு கொடிய திருடனாக, வரலாறுகள் பதிவு செய்திருக்கின்றமையாகும். அதாவது பொருள் இல்லாதவனால் பொருளைத் திருட முடியும் அறிவில்லாதவனால் அறிவைத் திருடமுடியாது என்ற ஒரு கோளே மருவி வால்மீகியை திருடனாக்கியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது. முதலில் காடு என்று நோக்கினால் அன்றைய காலத்தில் அரசர்களின் ஆட்சிப் பரப்புக்குள் வராத காடுகள்தான் அரசர்கள் அரசியல் தஞ்சம் பெறும் காடுகளாக இருந்து இருக்கின்றன. எனவே காடுகள் அரசர்களுக்கு உரிமையில்லாத பிரதேசமாக இருந்தமையால் தனியுடைமைகள் காட்டில் கிடையாது. திருட்டு என்பது தனியுடைமைகளையோ அரச உடைமைகளையோ அனுமதியின்றி அடைவதை குறிக்கும் சொல்லாகும். எனவே காடு என்பது அரசர்கள் காலத்தில் அரச உடைமையாக இருக்கவில்லை. தவிர தனியார்கள் உடமையாகவும் இருக்கவில்லை. மேலும் காட்டில் வாழ்பவர்கள் காட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு குடில் அமைத்து காட்டில் கிடைக்கும் விலங்கு பறவைகளை வேட்டையாடியும், மரப்பொந்துகளில் உள்ள தேனை எடுத்தும் மரங்கள் மற்றும் கொடி செடிகளில் இருந்து கிடைக்கும் காய் கனி மற்றும் கிழங்கு வகைகளையே உணவாக உண்டு வாழ்ந்தனர். எனவே காட்டில் வாழும் வேடுவர்கள் தேவை உணவு மட்டும்தான் தவிர காடு என்பது தனியுடைமை இல்லாததால் பொதுவுடமைக் கோட்பாட்டுக்குள் வருவதால் வேடுவர்கள் வாழ்வில் திருட்டு என்ற சொல் பொருள் அற்றது.

அடுத்ததாக ஒரு காலத்தில் நாட்டில் உள்ள மிக முக்கிய அறமாக இருந்தது. கணவனுக்கு அவனது மனைவி அவனது உடமையாகவே கருதப்பட்டாள். ஆக ஒருவனது மனைவியை முறையற்ற விதத்தில் கவர்ந்தாலும் அதுவும் திருட்டுக் குற்றத்திற்குள் வருகின்ற குற்றமாகும். ஆனால் காட்டில் அவ்வாறு இருக்கவில்லை. விரும்பியவர்கள் விரும்பியவர்களுடன் வாழலாம்.

இங்கே இராமாயணத்தைப் பாடிய வால்மீகி அறம் தவறாது உள்ளதை உள்ளபடி பாடியதன்மூலம், அறம் பற்றிய அறிவை அறிந்திருக்கின்றார். காட்டில் வாழ்ந்தாலும் நாட்டில் உள்ளவர்கள் அறங்களை மதிக்கும் அறிவையும் பெற்றிருக்கின்றார். தவிர இராமன் இராமாயணத்தின் கதாநாயகனாக இருந்தபோதும் இராவணன் இராமாயணத்தின் வில்லனாக இருந்தபோதும் உள்ளதை உள்ளபடி பேசியிருக்கின்றார். அதாவது இராமனது குறைகளை சுட்டிக்காட்ட வேண்டிய இடத்தில் சுட்டிக்காட்டியும், இராவணனுடைய பெருமைகளைப் பேசவேண்டிய இடத்தில் பேசியும் இருக்கின்றதன்மூலம் நடுநிலை தவறாதவன் என்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையும் வால்மீகிக்கு உண்டாகின்றது. எவ்வாறாயினும் மகாபாரதத்தில் அரசர்களுக்காக தூதுபோய் அரசர்களுக்கு துணையாக போரில் நின்று அரசர்களைக் காத்த ஸ்ரீ கிருஸ்ணர் அவதாரமாகப் போற்றப்படுகின்றார். ஆனால் அரசர்களுக்காக தூதுபோய் அரசர்களுக்கு துணையாக போரில் நின்று அரசர்களைக் காத்த ஆஞ்சநேயன் அவதாரமாகப் போற்றப்படாது வெறும் மனிதனாக நின்று தனது தனிப்பட்ட வாழ்வுக்குப் போராடிய ஸ்ரீ ராமர் அவதாரமாகப் போற்றப்பட இங்கே இதுவும் ஒரு திரிபுதான் ஆனால் வரலாறு அதன் தொடர்ச்சி மாறாது ஆவணப்படுத்த, தவிர்க்கமுடியாத ஒரு நிலையாக இது காணப்படுகின்றது.

எனவே வைணவ சமய அவதார கோட்பாடு, பாரபட்சமில்லாது ஒரு வரலாற்றின் தொடர்ச்சியை ஆவணப்படுத்தியுள்ளது. மேலும் அரசன், ஆண்டி, வேடுவன் மற்றும் குரு (பிராமணர்) உட்பட நாயன்மார்களில் நால்வகை தத்துவத்தையும் பிரதிபலிக்கச் செய்கின்றது.

இவ்வாறு புராண இதிகாசங்களிலும் மற்றும் உப கதைகளிலும் புராண இதிகாசங்களை இயற்றியவர்கள் வரலாறுகளிலும் திரிபுகள் ஏற்படக் காரணம் அன்றைய காலச் சூழ்நிலைகளின் தாக்கம் முக்கிய பங்கு வகிக்கின்றது. எவ்வாறாயினும் ஏதோ ஒரு வடிவில் பல உண்மைகள் குறியீடுகள் மூலம் மறைத்துச் சொல்லப்பட்டு இருந்தாலும் அவை இடியப்பச் சிக்கல்போல் ஒரு அலகுக்குள் சுருக்கி வைக்கப்பட்டிருக்கின்றமையும் ஆகும். மேலும் புராண இதிகாசங்கள் மற்றும் இயற்றியவர்கள் வரலாறுகள் புனையப்பட்ட கற்பனைகளாக இருந்தாலும் கூட, மிகவும் அற்புதமான செய்திகளை மறைத்துச் சொல்லும் ஊடகமாக திகழ்கின்றது. முக்கியமாக காட்டில் இருந்து வேடுவனால் இராமாயணம் சொல்லப்பட்டது என்ற செய்தியூடாக அழிந்துபோன ஒரு வரலாறே ஆவணப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்ற உண்மை எமக்கு கிடைக்கின்றது.

எனவே திறனாய்வு என்பது படைப்பாளியின் மனநிலையைப் புரிந்துகொண்டு படைப்பின் நோக்கங்களை அறிவதாகும். இங்கே நாம் அதற்குரிய ஆழமான அறிவைப் பெற்றிருந்தால் மட்டுமே இது சாத்தியமாகின்றது. மேலும் திறனாய்வு என்பது கல்வியாலும், குருவின் வழிகாட்டுதலாலும் வருவது இன்றைய நடைமுறையாக இருந்தாலும் அவை துறை சார்ந்தவையாக இருக்க அறிவியல் பரிணாம வளர்ச்சி காரணமாக இருக்கின்றது. இவ்வாறு இருப்பதால் திறனாய்வுகளும் துறைசார்ந்தவையாகவே இருக்கின்றது. ஆனால் புராண இதிகாசங்கள் மாய உருவில் களமமைத்து அதற்கான வாழ்வியல் அனுபவங்களை எமக்குத் தரும்போது தவிர எமக்கு தேடலுக்கான தேவைகளையும் உருவாக்கும்போது அனுபவ ரீதியாகவும் புராண இதிகாசங்களை திறனாய்வு செய்யும் அறிவு கிடைக்கின்றது.

எனவே அறிவியல்கள் என்பது அச்சடிக்கப்பட்ட புத்தகங்களாய் வானில் இருந்து இறக்கி வைக்கப்பட்டவையல்ல. மாறாக மனிதன் மற்றைய உயிரினங்களில் இருந்து வேறுபாடாக படைக்கப்பட்டு சுய தேடல்களால் அறிவியல்களை உருவாக்கினாலும் எல்லோருக்குள்ளேயுமே சுய தேடல்கள் இருப்பதில்லை. காரணம் கைவசம் கல்வி மற்றும் நவீன அறிவியல்கள் இருப்பதால் மீண்டும் அடிப்படைகளில் இருந்து மனிதன் வளரவேண்டிய எந்த அவசியமும் இல்லை.

*ஆடம்பரமோ அலட்சிய எண்ணமோ மனிதனுக்குக் கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மனிதன் காடுகளுக்குள் போய் வேடுவனாக மாறி மீண்டும் சுய தேடல்களை உருவாக்கி இன்றைய நிலையை அடையமுடியாது.

எவ்வாறாயினும் எல்லாம் இறைவனால் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரல்களில் நடப்பதால் காலம் எமக்குப் பல்வேறு அனுபவங்களைத் தந்து புராண இதிகாசங்களை புரிந்துகொள்ள காரணமாக அமையலாம். இவை வெறும் வார்த்தைகளால் புரிந்துகொள்ள வைக்க முடியாது. அனுபவங்களாலேயே சாத்தியமாகின்றது.

---

## வள்ளுவர் காட்டிய வாழ்க்கை நெறி

ஒருவருக்கு தான் வாழ்க்கை நடாத்துவதற்கு அறிவு இருந்துதான் ஆகவேண்டும் என்று அவசியம் கிடையாது. பழக்கவழக்கத்தினாலேயே பலர் பிறந்து இருந்து வாழ்ந்து மறைகின்றார்கள்.

அறிவு, பகுத்தறிவு இல்லாத உயிரினங்கள் உலகத்தில் பிறக்கின்றன. உண்ணுகின்றன. உறங்குகின்றன. இனத்தைப் பெருக்குகின்றன. காலம் வந்தால் மறைகின்றன. இத்தனை காரியங்களையும் அறிவில்லாத இனங்களாகிய அவை பழக்கத்தினால்த்தான் செய்கின்றன.

காலையில் வீட்டிலிருந்து மாட்டினை அவிழ்த்துவிட்டால் அந்த மாடு மாலை வரைக்கும் மேய்ந்துவிட்டு நேரே வீட்டுக்கு வந்துவிடுகின்றது. இது பழக்கத்தினால் நடைபெறும் செயலாகும். அறிவுகொண்டு சிந்தித்து வெளியே போய் இந்த மாடு திரும்பி வருவதில்லை.

அதேபோல் பலர் பழக்கத்தினாலேயே பிறந்து வளர்ந்து திருமணம் செய்து குழந்தை குட்டிகள் பெற்று மறைகின்றனர். அறிவைப் பயன்படுத்திக்கொள்ளத் தெரியாமலோ அல்லது அவசியம் இல்லை என்று கருதியோ பலர் காலம்தள்ளி வருகிறார்கள்.

"உங்களுக்கு அறிவு இருக்கிறதா?" என்று ஒருவரையும் கேள்வி கேட்கக்கூடாது. அதை நாமே தெரிந்துகொள்ள வேண்டும். பிறரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளப்படுவது அல்ல அறிவு. உலகத்தில் முன்னோர்கள் அறிந்து சொல்லிய உண்மைகளை சிந்தித்துப் பார்க்காமல் ஒதுக்கிவிடுவது புத்திசாலித்தனமாகாது.

பொருட்செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால் அறிவுச் செல்வமோ கொடுக்கக் கொடுக்க வளரும். கற்றவர்களுக்கு இன்பம் தரும். கற்றவர்கள் அறிவுச் செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். அவ்வாறு கற்றறிந்த அறிவுடையோருக்கு ஒரு காமம் உண்டு. "கற்றோரைக் கற்றோரே காமுறுவர்" என்பதுபோல கற்றவர்கள் ஒருவரை ஒருவர் விரும்புவார்கள். காமம் என்ற சொல் குறிப்பிட்ட ஓர் இன்பத்தினை மட்டும் சொல்லுவதாகக் கொள்ளுதல் கூடாது. பொதுவாக ஆசைப்படுகின்ற அனைத்தையும் காமம் என்ற சொல் குறிப்பதாகும். தாம் மகிழ்ச்சியும் இன்பமும் அடைவதற்குக் காரணமாக இருக்கின்ற கல்வி அறிவு உலக மக்கள் இன்புறுவதற்கும் காரணமாக இருக்கின்ற உண்மையினை உணர்ந்து கற்றறிந்த மேதைகள் மேலும் மேலும் கல்வியில் காமுறுவார்கள்.

"தாம் இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

(குறள் 399)

இவ் வள்ளுவர் வாக்கிற்கமைய கற்றறிந்தவர்கள் காமுறுவார்கள் என்பதுவும் கற்றறிவு இல்லாதோர் காமுறுவதில் அர்த்தமில்லை என்பதுவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதல்லவா?

-கா. கணேசதாசன் -

*உள்ளதைக்கொண்டு திருப்தி அடைந்தவன் உலகத்திலே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை

82

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பிரதட்டை செய்வதுஓர் நேர்த்திக்கடன் மட்டுமன்று
நிலத்தூடு இறையை எம்முள் பிரதிட்டை செய்வதுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் பிரதட்டை செய்யாதார்
பிரதட்டை செய்தென்ன அதுநிசம் நீத்த நிழலேயாம்.

02 குளித்தல் என்பது ஓர் உடல்களுவல் மட்டுமன்று
நீரூடு இறையை எம்முள் பிரதிட்சை செய்வதுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் குளித்தலினை மேற்கொள்ளார்
குளித்தென்ன முழுகியென்ன அதுநிசம் நீத்த நிழலேயாம்.

03 தீமூட்டி நாம் காணல் குளிர் காய்தல் மட்டுமன்று
தீயூடு இறையைஎம்முள் பிரதிட்சை செய்வதுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் தீமூட்டிக் குளிர்காயார்
குளிர்காய்ந்து என்னபலன் அதுநிசம் நீத்த நிழலேயாம்.

04 சுவாசித்தல் என்பது ஓர் காற்றிழுத்தல் மட்டுமன்று
காற்றூடு இறையை எம்முள் பிரதிட்சை செய்வதுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் காற்றிழுத்து மூச்சுவிடார்
சுவாசித்து என்னபலன் அதுநிசம் நீத்த நிழலேயாம்.

05 ஆகாயம் பரந்திருத்தல் ஏகாந்தம் காட்டவன்று
ஆகாயத்தூடு இறையை எம்முள் பிரதிட்சை செய்யவுமாம்
பிரதிட்சை செய்வதற்காய் ஆகாயம் நோக்காதார்
ஏகாந்தம் நோக்கியென்ன அதுநிசம் நீத்த நிழல்தானே.

06 தம்முடலில் இருந்துவீசும் நாற்றம் கூட
தம்தமக்கு சிலவேளை வாசமாகும்
சங்கடங்கள் மனத்திலில்லை மனத்திலேதான்
நம்போலப் பிறரை எண்ணில் பகையே இல்லை.

*நேர்மை இல்லாத கையாள் நேர்மையுள்ள அதிகாரியையும் கெடுத்துவிடுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 உடல்கூறு ஒன்றினிற்கு பழக்கம் ஒன்றை
உரியபடி பழக்கிவிட்டால் அது வழக்கமாகும்
ஒழுக்கமும் அப்படித்தான் அதைப் பழகிக்கொண்டால்
அதுவே பின் வாழ்வெல்லாம் வழக்கமாகும்.

08 பெரிதாக ஒன்றினைநாம் மனத்தெண்ணி வாழ்வதிலும்
சிறிதெனினும் கிடைத்ததினை அனுபவித்தல் மேலாகும்
மனதிலே நினைத்துவிட்டால் மாடிமனை தோன்றிடாது
கிடைத்ததைத் தவறவிட்டால் வெறுங்கை பின் முழமிடாது.

09 சூரியன் மேல் தீமூட்டி வைத்தவர்கள் நாங்களன்று
சந்திரனை வீழாமல் காப்பவரும் நாங்களன்று
பூமியினை ஓய்ந்திடாமல் சுழற்றுவதும் நாங்களன்று
அதுவேதான் இறையென்று அறிந்திறையைப் பணிந்துயர்வீர்.

10 விண்வெளியில் எத்தனைதான் ஒலியலைகள் ஒளியலைகள்
அதில் ஒன்றேனும் எங்களுக்குகேட்பதில்லை தெரிவதில்லை
ஆனாலும் கருவியொன்றில் தெரிதல்போல் கேட்டல்போல்
இறைஒளியோடு ஒலிகேட்க உள்ளத்தை உருக்க வேண்டும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் செய்ய விரும்பு

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

உலகத்துக்கு குறிப்பாகப் பிள்ளைப் பருவத்தினர்க்குச் சில நீதி நெறிகளைச் சொல்ல விரும்பிய ஔவையார், ஒரு அழகாக, அகர வரிசையில் சொல்லத் தொடங்கினார். அந்த வகையில் அவரது முதல் நீதி அறம் செய விரும்பு என்பதாம்.

"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே"

என்று கடவுள் வாழ்த்துப் பாடித் தொடங்கப்பெற்ற இந்த நீதிநூலுக்கு ஆத்திசூடி என்ற பெயர் சூட்டப்பெற்றுள்ளது மக்கள் அறிவர்.

இரு வரிகளில் ஒரு காவியம் என்று திருக்குறளில் ஒரு குறளையும் அதன் பொருளையும் சுருக்கமாகச் சொல்லி இக் காலத்தில் பலரும் தமது பரப்புரைகளைத் தொடங்குவதை நாம் அவதானிக்கலாம். அதுபோல் ஒரு வரியில் ஒரு காவியம் அமைந் திருக்கும் ஆத்திசூடியின் முதலாவது வாக்கியமான அறம் செய விரும்பு என்பதில் அடங்கி யுள்ள ஒரு பெரிய தத்துவத்தை ஆராய்வதே இக் கட்டுரையில் எமது குறிக்கோள் ஆகும்.

அறம் செய்ய விரும்பு என்ற வாக்கியத்தில் முதலாவது சொல் அறம். முதலாவது எழுத்து அகரம். தமிழ் நெடுங்கணக்கிலுள்ள முதலாவது எழுத்து அகரம். அது உயிர் எழுத்து. ஏனைய எழுத்துக்கள் பிறப்பதற்கு முன் "அ" உயிர் ஒலிக்கிறது. அத்துடன் அகர உயிர் உலகத்துக்கு இறைவன் எல்லா உயிர்களிலும் கலந்து அறிவாகி நிறைந்து நிற்கின்றமைக்கு உவமானமாகக் கூறப்பெறுகின்றது. இதனை உமாபதி சிவாச்சாரியார் இவ்வாறு கூறுகின்றார்.

அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து
(திருவருட்பயன்) என்பதாம்.

திருவள்ளுவரும் எழுத்துக்களின் பிறப்பிடமாக அகர உயிர் நிற்பதுபோல இறைவன் உலகத்துக்கு முதல்வனாக இருக்கிறான் என்று கூறுகின்றார்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள்) என்பது இந்த வகையில் "அ" என்ற உயிர் எழுத்து முக்கியத்துவம் பெறுகிறது.

இனி அறம் என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை வாழ்க்கை நெறியில் அறம் முதலாவதாகச் சொல்லப்பெறுகிறது. அற வழியில் பொருள் தேடி, இன்பமாக வாழ்ந்தால் வீடுபேறு தானாக வந்து சேரும் என்பது

*கடவுள் பருவங்களைப் படைத்தான். மனிதன் பஞ்சாங்கத்தைப் படைத்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் வாக்காகும். சைவநெறி கூறுவதும் அதுவேயாகும். அன்றியும் சைவ கலை பண்பாட்டு இலக்கியங்களெல்லாம் இந்த நான்கு கருப்பொருள்களை அல்லது அவற்றுள் ஒன்றை மையமாக வைத்து எழுதப்பட்டவையாக இருக்கும். இருக்கவேண்டும். அவ்வாறின்றேல் அந் நூல்களால் மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை என்று ஆகிவிடும்.

இங்கே அறம் என்பது தனக்கும் சமூகத்துக்கும் நன்மைதரும் செயற்பாடுகளைக் குறிக்கும். நல்வினைகள் எனும்போது புண்ணியங்கள் என்கிறோம். தீவினைகள் பாவம் என்கிறோம். எனவே புண்ணியம் செய்யத்தக்கது. பாவம் விடத்தக்கது. புண்ணியம் என்பது நல்ல அறவினையைக் குறிக்கும். வழியில் இருக்கும் வாழைப்பழத் தோலை அகற்றி விடுவதும், பசிப்பிணி போக்க அன்னதானம் செய்வதும் நல்லறங்களே. பொறுமை காத்து இன்சொல் பேசி, உண்மைபேசி இன்முகத்தோடு நற்செயல்களைச் செய்வதும் நல்லறமாகும். சரீர உதவியோ, பொருளுதவியோ அன்றி மனிதாபிமான உதவியோ செய்வதெல்லாம் அறத்தின்பாற்படுவனவே. இவ்வாறு நமது வாழ்வில் பொருள் தேடும்போது நல்லற வழியில் அவற்றைத் தேடவேண்டும் என்பதையே ஒளவையார் கருத்திற் கொண்டிருந்தார். அதனால் அறம் என்பதனை முதலிற் கூறிவைக்க எண்ணினார்.

இனி அறம் செய்ய வசதியிருந்தும் மனமில்லாமல் இருப்பவனுக்கு "அறம் செய்" என்று சொல்வதில் பிரயோசனமில்லை. அவன் செய்யான். அதனாலே அறம் செய்ய விரும்பு என்று சொல்லுகிறார். அறம் செய்வதாகிய இரண்டாவது நிலையைக் கூறாமல், விரும்புவதான முதலாவது நிலையைக் கூறி அமைகிறார் ஒளவையார். மனதிலே விருப்பத்தை ஏற்படுத்தினால் அவன் எப்படியும் அறத்தைச் செய்வான் என்ற எதிர்பார்ப்பு அவரிடம் இருக் கிறது.

இம்மை மறுமை இரண்டிற்கும் அறம் வேண்டப்பெறுகிறது.

இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
ஒருமை பிறங்கிற்று உலகு என்பார் தெய்வப்புலவர்.

இம்மை என்னும் இவ்வுலக வாழ்விற்கும், மறுமைக்கும் நல்லறம் மிகவும் வேண்டப்பெறுகிறது. ஆக அறம் என்ற சிறப்பான சொல்லோடு நீதி வாக்கியத்தை ஆரம்பிக்கும் ஒளவையார் அறம் செய் என்று சொல்லாமல், செய்ய விரும்பு என்று வாக்கியத்தை முடிக்கின்றமை மிகவும் முக்கியமானது.

மனம் உள்ளவன் மனிதன். ஆயினும் ஒன்றைச் செய்யும் மனம் அதாவது விருப்பம் இல்லாமலும் மனிதன் இருக்கிறான் என்பதால் "செய்ய விரும்பு" என்று மனிதனுக்குப் பாடம் புகட்டுகிறார் ஒளவையார் என்பது தெளிவாகிறது. மனதிலே விருப்பத்தை ஊட்டிவிட்டால் அறவினை தானே நிகழும் என்பது அவரது நம்பிக்கை ஆகிறது. ஆகவே அறம் செய்ய விரும்பு என இவ்வளவு சிறப்பான ஒரு வாக்கியத்தை எடுத்துக்கூறி மனித வாழ்க்கை சிறப் பாய் அமைய ஒரு பெரிய தத்துவத்தை விளக்கிய ஒளவையாரின் பொன்மொழி போற்றத்தக்கது.

மகாபாரதத்திலே தேரோட்டியின் மகனான கர்ணன் கொடைக்குக் கர்னன் என்று இன்றும் புகழ் பெறுகிறான். பெரும் இராசாதி ராசனான துரியோதனன் பாண்டவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயிருக்கும் இடந்தானும் இல்லையென வனத்துக்கு அனுப்புகிறான். இவர்கள் இருவரினதும் மனந்தான் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் காரணமாகிறது. பொருளல்ல என்பது நாம் உணர்வோமாக.

இனி இந்த அறம் செய்ய விரும்பு என்ற சிறப்பான வாக்கியத்தைச் சிறுவர்களின் மனதிலே பதியச் செய்துவிட்டால் இளமையிற் கற்கச் செய்துவிட்டால் அவர்களின் வளர்ச்சிப் பாதையில் நல்ல பலனைத் தரும் என்பது ஔவையாரின் உள்ளத்துணிபு என்பதையும் நாம் உணரவேண்டும். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதும் உண்மையே.

தெய்வப்புலவர் திருவள்ளுவரும் அறவினைக்கு நல்ல மனமே அவசியம் வேண்டப்பெறும் என்று கூறி இருப்பதுங் காணலாம்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (குறள்)

மாசற்ற மனமுடையவராக வாழுங்கள். அவ்வளவே அறம் ஆகும். ஏனைய செயல்கள் மனம் தூய்மை இல்லாமல் செய்யும் செயல்கள் எல்லாம் மற்றவர்கள் தம்மை மதிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் செய்வனவே என்கிறார் தெய்வப்புலவர்.

ஆக ஔவையார் விரும்பு என்று சொல்கிறார். திருவள்ளுவர் விரும்புகின்ற மனம் பற்றிச் சொல்லுகிறார்.

ஒரு செயற்பாட்டில் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றும் தூய்மையாக இருக்க வேண்டும். அவற்றுள் மனம் தூய்மையாக இருந்துவிட்டால் ஏனைய சொல்லும் செயலும் நன்கு நடைபெறும் எனும் தத்துவம் உணர்த்தப்பெற்றிருப்பதை உணர்வோமாக.

அறம் செய்ய விரும்பு.

## குருபூசை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஏப்ரில் | 06 | பங் 24 | சனி | பரமகுரு சுவாமி |
| ஏப்ரில் | 07 | பங் 25 | ஞாயிறு | குழந்தைவேற்சுவாமி |
| ஏப்ரில் | 09 | பங் 27 | செவ்வாய் | செல்லப்பாசுவாமி |
| மே | 03 | சித் 20 | வெள்ளி | திருநாவுக்கரசர் |
| மே | 08 | சித் 25 | புதன் | சிறுத்தொண்டர் |
| மே | 10 | சித் 27 | வெள்ளி | மங்கையற்கரசியார் |
| மே | 25 | வை 12 | சனி | திருஞானசம்பந்தர் |
| | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |

*பசியைப் போக்குதல்தான் தூய அன்பின் உண்மையான உயர்ந்த வெளிப்பாடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வி நிலை என நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா

**– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –**

உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம். உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம்.

பூச்சியத்துக்குள்ளே இராட்சியம் உருவாகும் வண்ணம் புதுப்புது உயிர்களாய் பரிணாமம் பெற்று எண்ணில் அடங்கா உயிர் இனங்களைக் கொண்டு உலகம் உருவான போதும் அதில் மனிதவர்க்கமே மேன்மையுள்ளதாக விளங்கி வருவதாயிற்று.

இந்த மனிதவர்க்கமானது பகுத்தறிவின் பயன்பாட்டோடு பார் முழுதும் பல்கிப் பெருகி வந்தபோதும் பாமர மக்களே பாமர மக்கள்தான். இந்த மக்களால் படைப்பின் நோக்கத்தை பூர்த்திசெய்ய முடியுமா இல்லை. படைத்தவரின் பார்வை இல்லாது பண்பாட்டுடன் கூட வாழ முடியுமா இதனால்தான் அகிலம் முழுவதும் ஆங்காங்கே ஆன்மீகவாதிகள் புத்திஜீவிகள் பண்பாளர்கள் என்று பற்பலரும் தோற்றம்பெற்று பண்பாடு பழக்கவழக்கங்கள் கலை கலாசாரம் முதலிய விழுமியங்களை வளர்த்து நின்றனர்.

மனிதன் மனிதனாக வாழ மாண்புமிகு எண்ணங்கள் அவன் மனதில் குடியேற வேண்டும். இதனால் அவன் மகத்தான பெறுபேறுகளை அடையமுடியும். பிறவிப் பெருங்கடலில் நீந்துவது மட்டுமன்றி உயர்ந்த சாதனைகளை புரிந்து இம்மைக்கும் மறுமைக்கும் உயர்ந்தன வாகி காலத்தால் அழியாத காவியங்களிற்கு கூட ஆளாகலாம். இதனால் மனித குலத்தை மகிமைப்படுத்துவதோடு மனிதனைப் படைத்த ஆண்டவனையும் மாட்சிமைப்படுத்த முடியும். இத்தனைக்கும் உயர்ச்சிகளுக்கு மேல் உயர்ச்சிபெற்று உலக இயல்புகளை வென்றெடுப்பது இலகுவாக இடம்பெறுமா. அதுதான் எப்படி?

பொறாமை என்பது பூண்டோடு அழிக்கப்படவேண்டிய ஒன்றாகும். போட்டி என்பது அப்படியல்ல. அது புனிதமானது. மிகவும் வேண்டப்படுவது அதிக கூடிய சக்தியை வெளிக்காட்டுவது உள்ளத்திற்கும் உடலிற்கும் உணர்ச்சிகளுக்கும் உசுப்பேத்தி உயர்ந்த சாதனைகளைப் பறைசாற்றி உலகெங்கும் பிரகாசிக்க வைப்பது.

இத்தகைய போட்டிகளில் வெற்றியும் உண்டு. தோல்வியும் உண்டு. இது உலக இயல்பானது வெற்றி என்றால் என்ன? தோல்வி என்றால் என்ன? வெற்றி பெற்றவன் குதூகலிக்கின்றான். தோல்வியானவன் துன்பத்தில் வாடுகின்றான். இந்த வெற்றிக்கும் தோல்விக்கும் நிபந்தனைகள் காரணிகள் நிறைய உண்டு. இவையெல்லாம் மனித ஆற்றலிலும் ஆரோக்கியத்திலும்தான் அமைந்து கிடக்கின்றது. இவை இரண்டும் இருவருக்கோ அல்லது

*ஏமாற்ற நினைப்பவனைக் கடவுள் முன்பே ஏமாறச் செய்துவிடுவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு சாராருக்கோ நிலையானதல்ல. இதனால்தான் வெற்றியும் தோல்வியும் சமமானதாகக் கொள்ளப்படுகிறது. இன்றைக்கு வென்றவன் நாளைக்கு தோற்கலாம். நாளைக்கு தோற்பவன் இன்றைக்கு வெல்லலாம். முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை. தோல்வியைக் கண்டு ஒருவன் துவண்டுவிடக் கூடாது. அது உண்மையிலும் உண்மை. ஒருவன் ஒரு நிகழ்விலோ ஒரு துறையிலோ தோற்றுவிட்டான் என்றால் தான் தோற்கவேண்டிய காரணம்தான் என்ன என்று அவன் நன்றாக ஆற அமர ஆலோசனை செய்ய வேண்டும். அதன் காரணத்தை கண்டறிந்து நிவர்த்தி செய்யவேண்டும். அடுத்த போட்டியிலும் தோற்று விடுகின்றான் இப்படி பல தோல்விகளிற்குப்பின் அனைத்தையும் நன்கு உணர்ந்து முன்னேற்றம் காணுகின்றான். தோல்வியின் அனைத்து அனுபவங்களையும் பெற்றுவிட்டான்.

இரு வீரர்கள் ஓடும்போது ஒருவன் தடக்கி விழுந்துவிட்டால் அவர் விர் என்று எழுந்து ஓடி முதலில் வெற்றி மரத்தை தொட்டுவிட்டான் இதன் காரணம் குன்றாத மனத் துணிவு இந்த நிலையில் விழாமல் ஓடியவன் விழுந்திருந்தால் அவனின் கெதி என்ன? தோல்வி என்பது பற்பல விதங்களில் பலதரப்பட்ட காரணங்களால் ஏற்படுகின்றது. ஆனால் அதுதான் நிலையானது என்று ஒருபோதும் எவரும் மனம் கொள்ளக்கூடாது. அப்படியாயின் வாழ்வதில் பயன் ஏது. முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார் முயற்சி திருவினையாகும். எதற்கும் முயற்சிக்க வேண்டும். முயற்சியை உடனே முன் எடுக்கும் திடமான தளராத உறுதியான மனத்துணிவு வேண்டும். அதுதான் ஆத்மபலம் எனப்படுவது விழுவது பெரிதல்ல. விழுந்தவன் எழுவதுதான் பெரிது. அதுதான் அதிகபலம் அதை அடுத்தே உடற்பலம். (ஆற்றல்) உள்ளத்தை பலமாக்கி உரமாக்கி உறுதிகொண்டு உன்னை முற்றுமுழுதாக உணர்ந்து அறிந்து செயற்பட்டால் உன்னால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை என்று சுவாமி விவேகானந்தர் உலக மக்களிற்குப் போதனை செய்தார். இதையே மகாகவி பாரதியும் உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும். தெய்வம் உண்மை என்றுதான் அறிதல் வேண்டும். வைரமுடைய நெஞ்சு வேண்டும். இது வாழும் முறைமை அடி பாப்பா என்று வழி மொழிந்தார். தூக்கமுடியாத ஒரு பொருளை தூக்குவேன் என்று திடசங்கற்பம் பூண்டால் தூக்கியேதான் ஆகவேண்டும். பானையில் இருந்தால் அகப்பையில் வரத்தான் வேண்டும்.

பல போட்டிகளைச் சந்தித்து தோல்விகளைப் பெற்றுக்கொண்ட ஒருவன் அதன் குறைபாடுகள் அனைத்தையும் தவிர்த்து நிறைவாக்கி முற்றுந்துறந்த முனிவன் போல் இனிமேல் தோல்வியே கிட்டாது என்ற அளவிற்கு தன்னை சுதாகித்துக்கொண்ட ஒருவனுக்கு இறுதியில் கிடைத்த வெற்றியானது எவ்வளவு விருந்தாக அமைகிறதோ அதுபோல் முதல் தரமாக வெற்றிபெறும் ஒருவனுக்கு அமையப்போவதில்லை. வெற்றி தோல்வியின் பயன்பாட்டை அவன் புரிந்துகொள்ளப் போவதில்லை.

பசி இல்லாதவனுக்கு பசியின் தாகம் தெரியாது. அதுபோல் ருசியின் திறனும் தெரியப்போவதில்லை. பசி உள்ளவன் அதன் கொடுமையை அனுபவித்து பின் உணவை உண்டு அதன் பெறுபேறுகளை ஜீரணிப்பதுபோல் பசியில்லாதவனால் ஜீரணிக்க முடியாது. தூக்கத்திற்கு அவகாசமில்லாத ஒருவன் தூக்கத்தின் முக்கியத்துவத்தில் மூழ்கிவிடுகிறான்.

*பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெறும் புற்தரையில் ஒரு துண்டைப்போட்டு படுத்தாலும் ஆழ்ந்த உறக்கத்தையும் அமைதியையும் பெற்று புத்துணர்ச்சியும் பூரிப்பும் அடைந்து விடுகிறான். அவகாசம் உள்ளவனுக்கோ நித்திரையில் நாட்டமில்லை. அதன் அவசியம் தேவைப்படுவதில்லை. எயர் கொண்டிசன் ரூமில் பஞ்சனையில் படுக்கப்போனாலும் பாதிப் பங்கு தூக்கம்கூட வந்து உதவப்போவதில்லை.

தோல்விக்கு மேல் தோல்வியைத் தழுவிக் கொண்டும் தளராத துணிவோடும் தன்மான உணர்வோடும் ஏழாவது தடவையாக தேர்தலில் போட்டியிட்டு அமெரிக்க ஜனாதிபதியாகி ஏகாதிபத்தியத்தை கைப்பற்றிக்கொண்ட ஆபிரகாம் லிங்கனை அகிலம் அறியும்.

முப்பது வருடங்கள் சிறையில் அடைபட்டு முழுமூச்சுக் குன்றாமல் மீண்டும் வந்து மக்களின் ஆதரவைப்பெற்று அதிகாரத்துக்கு வந்த கறுப்பின மக்கள் வாழும் ஆபிரிக்கநாட்டின் நெல்சன் மண்டேலாவை யாரும் மறந்துவிடமுடியாது.

அனுபவமும் ஆளுமையும் உலக இயல்பில் தெய்வீகத்துக்கு ஒப்பானது. எனவே தோல்வி என்பது மக்களின் வாழ்வுக்கு எந்த அளவில் செல்வாக்கு செலுத்துகிறது என்பது யாவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமே.

## அருள் மழை பொழிபவன்

*பல்லவி*

அருள் மேவும் சந்நிதியில் ஆலயம் கொண்டவன்!
ஆறுதலைத் தந்து எம்மை ஆளுகின்ற ஆறுமுகன்!
(அருள்)

*அநுபல்லவி*

உருகிப் பாடவே உளங் கனிந்து வருபவன்!
உள்ளத்து இருள் அகற்றி ஞான ஒளி தருபவன்!
(அருள்)

*சரணம்*

வேலோடு வந்து எங்கள் வினைகளைக் களைபவன்!
விண்ணவரும் மண்ணவரும் ஏத்துகின்ற சண்முகன்!
கோலக் குமரன் எங்கள் குறைகளைத் தீர்ப்பவன்!
குன்றுதோறும் குடிகொண்டு குவலயத்தைக் காப்பவன்!
(அருள்)

அழகு தமிழில் திருப் புகழினைப் பாடவே
அருணகிரிக்கு அடி எடுத்தே கொடுத்தவன்!
அழகான மயிலில் வந்து காட்சி தருபவன்!
அன்பர்கள் குறைதீர்த்து அருள்மழை பொழிபவன்!

-கி. குலசேகரன்-

*நீதிபதியைவிட காலம்தான் உண்மையை வெளியே கொண்டுவருகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| T. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| S. யோகராஜா | சுவிஸ் | 10000. 00 |
| ஸ்ரீ இளவரசி | புத்தூர் | 1000. 00 |
| தே. தயானி | லண்டன் (அச்சுவேலி) | 15000. 00 |
| சு. யோகரட்ணம் | கனடா | 10000. 00 |
| திரு இளஞ்சன் குடும்பம் | லண்டன் | 25000. 00 |
| சி. லக்ஷ்மனன் | சுவிஸ் (கொக்குவில்) | 20000. 00 |
| செ. கனகலிங்கம் | சுவிஸ் (இணுவில்) | 5000. 00 |
| S. வேலழகன் | இடைக்காடு | 1000. 00 |
| N. பிரபாகரன் | இடைக்காடு | 5000. 00 |
| அ. நிரஞ்சனா | கொழும்பு | 1000. 00 |
| பு. செந்தில்குமரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 2000. 00 |
| ம. மகரசேன | சிறுப்பிட்டி | 3000. 00 |
| R.K. முருகேசு சுவாமி நினைவாக | கொழும்பு | 5000. 00 |
| J. ஆதித்தியன் | மாலிசந்தி | 10000. 00 |
| நா. கந்தப்பு நினைவாக | அச்சுவேலி | 15000. 00 |
| ஐ. அரசபிள்ளை | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. கனகரட்ணம் | நல்லூர் | 1000. 00 |
| கி. முகிலன் | லண்டன் | 10000. 00 |
| ஐ. வர்ஷா | ஊரெழு | 2000. 00 |
| R. சோதிலிங்கம் | கனடா | 1000. 00 |
| சந்நிதி முருகன் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ர. மகதன் | மானிப்பாய் | 10000. 00 |
| வ. இரத்தினசிங்கம் | கம்பர்மலை | 3000. 00 |
| R. நவரத்தினம் | கொழும்பு-07 | 10000. 00 |

*தான் நேசிப்பதைக் கொடுக்காதவன் தான் விரும்புவதையும் அடையமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உ. சர்பா | ஜேர்மன் | 15000. 00 |
| ஜெ. செல்வஜெயன் | உரும்பராய் | 1000. 00 |
| திரு மகேஸ்வரன் குடும்பம் | இணுவில் | 500. 00 |
| திரு விக்னேஸ்வரலிங்கம் குடும்பம் | கனடா | 1500. 00 |
| திரு தனபாலசிங்கம் குடும்பம் | அச்சுவேலி | 5000. 00 |
| T. ஜெகநாதன் மூலம் உஷாதேவி நினைவாக | கெருடாவில் | 5000. 00 |
| செ. கோகுலானந்தன் | நவாலி | 2000. 00 |
| பொ. யோகேஸ்வரன் | லண்டன் | 5000. 00 |
| R. பிரபாகரன் | இணுவில் | 5000. 00 |
| சு. சுதன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| T. சிவானந்தி | லண்டன் (ஊரெழு) | 25000. 00 |
| ப செந்தில்குமரன் | இருபாலை | 30 பவுன்ஸ் |
| த. சிவகுமாரன் | இணுவில் | 1புட்டி அரிசி 5000. 00 |
| K. ஜோராஜன் | கொழும்பு | 2000. 00 |
| பூ. இளங்கோ | மந்திகை | 5000. 00 |
| வ. துசானி | உரும்பராய் | 4000. 00 |
| திரு வரதராஜன் மூலம் நல்லையா கந்தசாமி | லண்டன் | 50000. 00 |
| க. சிவராஜா | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| வி. புருஷோத் | பிரான்ஸ் | 5000. 00 |
| திருமதி ப. கலைச்செல்வி | சுழிபுரம் | 10000. 00 |
| கா. ரவீந்திரதாஸ் | திருகோணமலை | 3000. 00 |
| இ. அருணசொரூபன் | நல்லூர் | 1000. 00 |
| வே. பாலசுப்பிரமணியம் | அச்சுவேலி | 2000. 00 |
| பொ. அம்பலவாணர் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வ. கருணிகா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சு. வித்யா | புத்தூர் | 500. 00 |
| S. மணிவாசகன் | கொழும்பு | 12000. 00 |
| ச. தில்லைநாதன் | அச்சுவேலி | 12000. 00 |
| க. சிவானந்தம் | ஏழாலை | 1000. 00 |
| திரு ஜெயராசா குடும்பம் | அமெரிக்கா | 10000. 00 |
| க. கண்மணி | அச்சுவேலி | 15000. 00 |
| மோ. கோபிதாஸ் | லண்டன் | 10000. 00 |
| இ. தங்கவடிவேல் | கரவெட்டி | 1000. 00 |
| S. மயூரதன் | இணுவில் | 5000. 00 |
| மு. ராஜேஸ்குமார் | வரணி | 10000. 00 |
| ர. சிந்திகா | வரணி | 10000. 00 |
| செ. நிஷாந்தன் | சுதுமலை | 50000. 00 |
| சி. மகேஸ்வரி | கரவெட்டி | 10000. 00 |

*நன்னடத்தை உடையவனை இன்பம் நிழல்போல் தொடர்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ச. கிருஷ்ணகுமார் | ஆவரங்கால் | 22000. 00 |
| து. அர்ச்சனா | சுவிஸ் | 5000. 00 |
| திருமதி ந. பிரதாஜினி | தாளையடி | 10000. 00 |
| சி. கலைவாணி | கரவெட்டி | 1000. 00 |
| க. கஜமதன் | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| S. சதுஷன் | திருநெல்வேலி | 5000. 00 |
| R. யோகேஸ்வரன் | இணுவில் | 15000. 00 |
| பா. நிவேதா | உடுப்பிட்டி | 5000. 00 |
| நா. தயாபரன் | நவக்கிரி | 2000. 00 |
| சபா ரேடேர்ஸ் | அச்சுவேலி | 2000. 00 |
| த. மங்களேஸ்வரி | கொக்குவில் | 2000. 00 |
| நி. தூயவன் | மல்லாகம் | 5000. 00 |
| ச. ரட்ஷிகா | லண்டன் | 2000. 00 |
| சி. தங்கராணி | ஊரிக்காடு | 20000. 00 |
| S. சதாசிவம் | திருநெல்வேலி | 1000. 00 |
| K. ராஜேந்திரன் | லண்டன் | 5000. 00 |
| S. மிகிந்தளா | கரவெட்டி | 1000. 00 |
| திரு புஸ்பராஜா குடும்பம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| ப. புனிதவதி | மல்லாகம் | 2000. 00 |
| மு. கனகசபாபதி | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| ப. செல்வநாதன் | கந்தர்மடம் | 1000. 00 |
| ஜெயகிருஷ்ணா ஸ்ரோர்ஸ் சுன்னாகம் | 1புட்டி பருப்பு, மரக்கறி, 3மூடை அரிசி | 2500. 00 |
| A. சியாமளருபன் | நல்லூர் | 2500. 00 |
| செ. ஸ்ரீனிவாசன் | அல்வாய் | 2500. 00 |
| சீ. இராமநாதன் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| செ. தரணிகா | கரணவாய் | 10000. 00 |
| நவரத்தினம் கனகம்மா | திருநெல்வேலி | 4மூடை அரிசி |
| இ. அருணசொருபன் | நல்லூர் | 1000. 00 |
| க. ஆதித்தியன் | கனடா | 3000. 00 |
| ச.வே. கந்தசாமி | அச்சுவேலி | 5000. 00 |
| க. குணேஸ்வரன் | கொக்குவில் | 15000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | 10000. 00 |
| பொ. கலாநிதி | உடுவில் | 5000. 00 |
| அ. சிவலிங்கநாதன், அ. பவளமலர் | திருநெல்வேலி | 10000. 00 |
| கா. மணிவண்ணன் | கரவெட்டி | 5000. 00 |
| ஞா. பிருத்திகா | வரணி | 5000. 00 |
| க. ஞானாம்பிகை | குப்பிளான் | 1000. 00 |
| P. கஜீபன் | சங்கானை | 5000. 00 |

*அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| K. தர்மித் | சங்கானை | 5000. 00 |
| நா. கிரிதரன் | அல்வாய் | 5000. 00 |
| வி. அபிஷேக் | கனடா | 10000. 00 |
| நா. ஈஸ்வரி | கொழும்பு | 1000. 00 |
| ஜெ. அஸ்விதா | அராலி | 1500. 00 |
| S. கோகிலா | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. ஸ்ரீராஜசிங்கம் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| M. ஆனந்தன் | இணுவில் | 20000. 00 |
| பி. மதுஷாயினி | தொண்டைமானாறு | 3000. 00 |
| T. வசீகரன் | அளவெட்டி | 2000. 00 |
| யோ. இறைவன் | இணுவில் | 5000. 00 |
| செ. அழகராசா குடும்பம் | கைதடி | 5000. 00 |
| மோ. ஜெயலட்சுமி | கைதடி | 1000. 00 |
| கு. திருநாவுக்கரசு | புத்தூர் | 1000. 00 |
| திருமதி கோ. வினுஷா | வவுனியா | 25kg அரிசி |
| கோ. திவாகரன் | வவுனியா | 1புட்டி அரிசி |
| க. வீரசிங்கம் | சங்கானை | 2000. 00 |
| L. ரஞ்சினிதேவி | கனடா | 5000. 00 |
| திரு புஷ்பன் குடும்பம் | தொண்டைமானாறு | 5000. 00 |
| க. கபிஷ் | ஜேர்மன் | 5000. 00 |
| திருமதி ம. ஜெயலக்சுமி | கொழும்பு | 26000. 00 |
| சி. சத்தியதேவி | ஊரெழு | 4000. 00 |
| வி. வேனுஷன் | தொண்டைமானாறு | 10000. 00 |
| ஜெ. சாய்சன் | அவுஸ்திரேலியா | 30000. 00 |
| வி. வினோத் | கனடா | 10000. 00 |
| ச. ரஜீவ் | சாவகச்சேரி | 6000. 00 |
| திரு சர்வேஸ்வரன் குடும்பம் | சாவகச்சேரி | 5000. 00 |
| ஐ. சிவகுமார் | சுதுமலை | 1000. 00 |
| S. கஜன் | காரைநகர் | 30000. 00 |
| இ. கீர்த்திகா | உரும்பராய் | 10000. 00 |
| வா. வாகீசன் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| சு. தாரணி | கல்வியங்காடு | 5000. 00 |
| T.V.M. ஸ்தாபனம் | பிரான்ஸ் | 2000. 00 |
| செ. ஆறுமுகம் | சுவிஸ் | 5000. 00 |
| N. சிவதாஸ் | புங்குடுதீவு | 10000. 00 |
| கு. ஸ்ரீகாந்தன் | உடுவில் | மரக்கறி, அரிசி |
| க. குமாரதாசன் | உடுவில் | 1000. 00 |
| நா. ருசீந்திரன் | இணுவில் | 2000. 00 |

(தொடரும்...

ஒழுக்கம் தீமையை மறைக்கிறது. ஆனால் மதம் தீமைகளை அழிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றித் தலைச்சி

– திரு மயில்வாகனம் சிவயோகசுந்தரம் அவர்கள் –

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலை அறியாதோர் இலங்கையில் இல்லை எனலாம். பழம்பெரும் பகுதிகளில் புதுமைமிக்க தலமான பன்றித் தலைச்சி ஈழநாட்டின் அற்புதக் கோவிலாகும். நல்லூர், செல்வச்சந்நிதி, கதிர்காமம், நயினாதீவு அம்மன் போன்ற அருள்பாலிக்கும் தலங்களில் இதுவும் ஒன்றாகும். இக்கோவிலில் இன, மத, சாதி, சமய வேறுபாடு இல்லாது அன்னையின் முன் எல்லோரும் ஒன்றே என்ற சமத்துவத்தை கண்ணால் கண்டு மகிழ்ந்து மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியைக் காணமுடிகின்றது.

பன்றித் தலைச்சி என்ற பெயரை பல கதைகள் மூலம் அறிய முடிகின்றது. பண்டைக் காலத்தில் மட்டுவிலில் வாழ்ந்த பறைக்குலப் பக்தன் ஒருவன் அங்கு வாழ்ந்த சண்டியனான மாட்டுச் சொந்தக்காரனது மாடொன்றைக் கொன்று இறைச்சியை உணவிற்கெடுத்துக்கொண்டு தலையையும் தோலையும் பக்கத்திலுள்ள வடலிக் கூடலில் புதைத்துவிட்டான். சண்டியனான மாட்டுச் சொந்தக்காரன் தனது கையாட்கள்மூலம் இவனைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க அனுப்பினான். ஏழை பக்தனோ "ஆச்சி இன்றோடு இக் கொலைத் தொழிலை விட்டுவிடுகிறேன்" என கோவிலில் அழுது புலம்பினான். மாட்டுக்காரன் ஆட்களுடன் வந்து நிலத்தைத் தோண்டியபோது அங்கு பன்றித் தலையே இருந்தது. பக்தனுக்கு பன்றித் தலைச்சி ஆச்சி அபயம் தந்து காத்தருளினாள். அன்று முதல் இந்த ஆலயம் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் எனப் பெயர் பெற்றது. மேலும் சேர் ஜோன் உட்ராப் என்ற பெயருடைய கல்கத்தா நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த ஆங்கிலேயர் அங்குள்ள வக்கீல்கள் குங்குமப்பொட்டுடன் வருவதை அவதானித்து அவர்களிடம் அதுபற்றி விசாரிக்க இது இந்து மதத்திலுள்ள அம்பிகையின் குங்குமப் பிரசாதம், கேட்ட வரத்தை வழங்கும் என விளக்கம் கூறினர். இதனால் ஆவலுற்ற நீதிபதி அம்மனின் அதிசயங்களை ஆராய்ந்து "தந்திர ராச தந்திர" என ஒரு நூலை வெளியிட்டார். அதில் பன்றித்தலைச்சி அம்மனது அற்புதத்தையும் மிக விளக்கமாக கூறியுள்ளார்.

மேலும் யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் இம் மண்ணில் நடமாடிய காலங்களில் பங்குனி முதல் திங்களில் பன்றித்தலைச்சி சென்று பொங்கலிட்டு வழிபட்டு வந்தமை இவ்வாலயத்தின் பெருமையை எமக்குணர்த்துகிறது. ஆனந்தா ஆச்சிரமத்திற்கு அருகில் குடில் அமைத்து வாழ்ந்த கௌரிபாலா என்ற ஜேர்மன் சுவாமியாருக்கு "சும்மா இரு கௌரிபாலா" என யோகர் சுவாமிகள் அருள்வாக்கு கொடுத்த தலமும் பன்றித் தலைச்சியாகும். எனது தந்தையார் மயில்வாகனம், லண்டன் வித்தியாபவன், நாகராசா மற்றும் சரசாலை அன்பர்கள் யோகர் சுவாமிகள் முன்னிலையில் பொங்கலிட்டுக் கொண்டிருந்தபொழுது ஜேர்மன் சுவாமிகளும் உடனிருந்தார். அவர் அங்கு நடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளை "அது என்ன இது என்ன" என யோகர்சுவாமிகளிடம் கேட்க, சுவாமிகள் "சும்மா விடு கௌரிபாலா" என அருளினார். அதுவே ஜேர்மன் சுவாமிகட்கு தீட்சையாயிற்று. அவர் சும்மாவிருக்கும் தத்துவத்தை ஆராய்ந்து "சும்மாவிருக்க ஒரு சூத்திரம்" என ஒரு நூலையும் தமிழில் வெளியிட்டார். மேலும் "சும்மா இரு" என கையிலும் பச்சை குத்தியிருந்தார்.

ஜேர்மன் சுவாமிகள் முதன்முதல் யாழ்ப்பாணம் வந்தபோது ஸ்ரீ லங்கா புத்தக சாலையில் பல சமய நூல்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது அவர் பின்னாலிருந்த தாடி வைத்த வயோதிபர் அவர் முதுகில் தட்டி "டேய் புத்தகத்தில் ஒன்றும் இல்லை எல்லாம் போகப்போகத் தெரியும்" என்றார். இவர் திடுக்கிட்டு யார் இந்த தாடி வைத்த கிழவர் என வினவ அவர்கள் "இவர்தான் நாடறிந்த சித்தரான யோகர் சுவாமிகள்" எனக் கூறினர். இதுதான் ஜேர்மன் சுவாமிகள் யோகர் சுவாமிகளிடம் பெற்ற முதல் அனுபவமாகும்.

பன்றித் தலைச்சியில் பங்குனித் திங்கள், வருடப்பிறப்பு, நவராத்திரி, கார்த்திகை சோமவாரம், திருவெம்பாவை என்பன மிகச் சிறப்பாக நிகழ்கின்றன. ஆனால் பங்குனித் திங்கள்தான் எல்லா மக்களையும் தன்பால் ஈர்க்கும் ஒரு நிகழ்வாக இருக்கும். பக்த கோடிகள் வைகறைப்பொழுதில் நாட்டில் நாலாபுறமிருந்தும் சாரிசாரியாக வந்துகொண்டிருப்பர். வருபவர் எல்லாம் பொங்கலுக்கு வேண்டிய சகல அடுக்குகளுடனும் வருவர். முதலில் எல்லோரும் அம்மனின் புனித நீரில் நீராடுவர். பிறந்த குழந்தைக்கோ வயதான வயோதிபர்கட்கோ குளத்து நீரை புனித தீர்த்தமாக தலையில் தெளிப்பர். பின்னர் எல்லோருமாக சேர்ந்து பொங்கிப் படைத்து அங்குள்ள அடியவர்களுடன் பகிர்ந்து சாப்பிட்டு அன்னையின் அருள் பெற்றுச் செல்வர். பன்றித்தலைச்சி அம்மனைத் தரிசிக்க வந்து பட்டினியுடன் செல்வோர் எவருமில்லை. எல்லோருக்கும் பொங்கலும் மோதகமும் நீர்ச்சோறும் போதும் என்ற அளவிற்குக் கிடைக்கும். அன்னையின் பொங்கலையும் அயல் தோட்டத்திலுள்ள கத்தரிக்காயையும் விரும்பி உண்ணாத மனிதர் இல்லை. அன்று நாள் முழுவதும் பூசையும் அபிஷேகமும் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். பல மைல்களுக்கு அப்பால் இருந்து பார்தாலும் பக்தர்கள் செய்யும் பொங்கல் புகை கலப்பதை கண்ணால் காணலாம். கொடிய தொற்று நோய்களும், கலகங்களும் அன்னையின் பெயரைச் சொல்லவே அகன்றுவிடும் தீராத நோய்களை எல்லாம் எத்தனையோ பேருக்கு தீர்த்து அன்னை அருளாட்சி புரிகின்றாள். 1958ஆம் ஆண்டு இனக் கலவரம் ஏற்பட்ட காலத்தில் எங்கள் குருநாதர் யோகர் சுவாமிகள் அன்னைக்கு அபிஷேகம் செய்யுமாறு அப்போது அரச அதிபராக இருந்த பரிகாந்தாவுக்கு உத்தரவிட்டார்.

கார்த்திகை சோமவார விரதமும், பங்குனித் திங்கள் விரதமும் பிடியாத குழந்தைகள் எவரையும் மட்டுவில் சரசாலைப் பகுதியில் காண முடியாது. பங்குனித் திங்கள்தோறும் பறைக்குலப் பக்தர்கள் வெளிவீதியில் பறை முழங்கி "சிலம்பு கூறல்" எனும் பாடலைப் பாடி தமது நன்றிக்கடனை அன்னைக்கு சமர்ப்பிப்பர். அதுபோல நீர்வேலி மக்களும் வசந்தன் கவிபாடி வசந்தன் அடிப்பதுண்டு.

"ஆத்தாளை அபிராம வல்லியை
தொழுவார்க்கு ஒரு தீங்குமில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றோர் மகிமை

– *திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு* அவர்கள் –

"கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" என்பது நாம் எல்லோரும் அறிந்ததே.

மேன்மக்கள், சான்றோர், நல்லோர், உயர் குணம் படைத்தோர், பண்பாளர் என அழைக்கப்படுவர். மனிதப் பிறவியிலே எல்லோரும் சமம் என்று நாம் கருதவேண்டியிருப்பினும் மக்களின் சிந்தனைகள், செயல்கள், நடத்தைகள் ஆகியவற்றை நோக்கி அவர்களை மேன்மக்கள், கீழ்மக்கள், தக்கோர், தகவிலார், பெரியோர், சிறியோர் என அறிஞர்கள் வகுத்துள்ளனர். இந்தப் பாகுபாட்டில் உயர் இடத்தில் நிற்பவர் சான்றோர் எனப்படுவர்.

இவர்கள் எப்போதும் தமது நிலையிலிருந்து மாறுபடார். தமக்கென்று உரிய உயர் கொள்கையில் உறுதியாக இருப்பர். தமக்கு பிறர் தீங்கு செய்யும்போதும் அவர்களை மன்னிக்கும் உத்தம குணம் கொண்டவராயிருப்பார். எச் சந்தர்ப்பத்திலும் உயர்ந்த பண்பிலிருந்து சிறிதும் கீழ் இறங்கமாட்டார்கள் இவர்கள்.

கீழ்மக்கள் கீழோர் எனப்படுவர். நற்பண்பு அற்றவராக அல்லது குறைந்தவராக இருப்பர். தமக்கு பல காலம் உதவி புரிந்தவர்களையும் எளிதிலே அலட்சியம் செய்து விடுவர். அவர்களிடம் நன்றி பாராட்டும் நற்குணம் காணப்படாது. இவ்விடத்தில் ஒரு சிறு கதையை நோக்குவோம்.

ஒரு ஊரிலே மனமொத்த இரு தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். நீண்டகாலம் அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்ததில்லை. ஆனால் ஒரு சமயம் பொருளீட்டும் பொருட்டு கணவன் மனைவியைப் பிரிய நேருகின்றது. பிரிய மனமின்றித் தன் மனைவியைப் பிரிகின்றான் அந்த அன்பான கணவன். மிகுந்த துயரத்தோடு தன் கணவனுக்கு விடைகொடுக்கிறாள். மனைவி வீதியின் முடிவு வரும் வரை வீட்டின் வாசலிலே நிற்கும் தன் மனைவியைத் திரும்பிப் பார்த்தபடியே செல்கின்றான் கணவன். அந்த உத்தம மனைவி கூறுகின்றாள்.

நான் தினந்தோறும் அன்புடன் வருடிய என் கணவரின் கால்கள் என் கணவரை என்னிடமிருந்து பிரித்துச் செல்கின்றன. ஆனால் என்னிடமிருந்து ஒரு சிறு உதவியும் பெறாத அவரது கண்களோ என்னைத் திரும்பிப் பார்த்தவண்ணம் உள்ளன.

கண்கள் மேலானவை. கால்கள் கீழானவை. கண்கள் இரங்குகின்றன. கால்கள் விரோதிக்கின்றன. இவ்வாறு அவள் மனம் கூறுகின்றது. இது உதாரணத்துக்குக் கூறப்பட்ட கதை.

மேலோர் என்றும் எதையும் பொருட்படுத்தாது தன்னலம் கருதாது பிறரைத் துன்பமடையச் செய்யாது உதவி புரிவர். ஆனால் கீழோரோ மிக எளிதில் உதவி செய்தவரையே வெறுத்து விரோதம் கொள்வர். மரங்களை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளுங்கள். வெட்டப்படாதவரை எல்லா மரங்களையுமே மரம் என்றுதான் அழைக்கின்றோம். ஆனால் வெட்டப்பட்ட பின்னும் உயர் மரங்களாகிய சந்தன மரம், அகில், தேக்கு முதலிய

*பகையைத் தாமாக விரும்பி மேற்கொள்ளக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் ஜாதி மரங்கள் சிறு துண்டுகளாக விற்பனைக்கு வரினும் அவை, தம் நாமத்தை இழப்பதில்லை. சிறுதுண்டாயினும் அவற்றைச் சந்தனக்கட்டை என்றே அழைக்கின்றோம்.

ஆனால், கானகத்தே வளரும் வேல், ஆல், புளி, புங்கு, கள்ளி போன்ற மரங்கள் வெட்டப்பட்டதும் விறகாகி விடுகின்றன. சிறு துண்டாக இவை கடைக்கு வந்தாலும் கடையே விறகுக்கடை என்றே அழைக்கப்பெறுகின்றது. மரங்களுக்கே இந்த நிலை என்றால் மனிதருக்கு எப்படி?

நல்லோர் இவர்கள் இன்னா செய்தோர்க்கும் இனியன செய்யும் மேன் மக்கள் ஆவர். பிறர் தமக்குத் தீங்கு செய்தபோதும், அவர்மீது கோபம் கொள்ளாது அறியாமையால் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள், எப்போது தான் இவர்கள் திருந்தப் போகின்றார்களோ, என்று தாம் மனம் நோவர்.

இது சான்றோர் இயல்பு. நல்லோர்க்கு கோபம் எளிதில் வராது. வந்தாலும் அதில் ஆபத்து இராது.

வாழை மரத்தைப் பாருங்கள். வாழைக் காயாக இருந்தாலும் பயன்படுகின்றது. பிஞ்சாக இருந்தாலும் பயன்படுகின்றது. பூவாக இருந்தாலும் பயன்படுகின்றது. இலையாகவும் பெரிதும் பயன்படுகின்றது. பழம் என்றால் சொல்லத் தேவையில்லை. ஆலயத்திற்கே எடுத்துச் செல்கின்றோமே.

ஆனால், எட்டி மரம் பழுத்தாலும் பயன்படாது. இந்த வகையில் நல்லன உலகில் நடப்பதற்குக் காரணம் நல்லோரே ஆவர். மழை பொழிவதும் நல்லோராலேதான்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை"

எனவே, நாமும், என்றும் நல்லோராக வாழ்ந்து நலம் அடைவோமா?

## சந்நிதியானே வேலே

இராகம்: சிவரஞ்சனி தாளம்: ஆதி

**பல்லவி**

கடற்கரையில் குடியிருக்கும் கந்தனே திரு முருகா
விடற்குரிய எண்ணமெல்லாம் வெந்துவிழ நான் அழைத்தேன்
(கடற்கரையில்)

**அநுபல்லவி**

தொடற்கரிய தூவெண்ணீறால் தூய்மைப்படுத்துவாய் நீ
படற்கரிய பாவமெல்லாம் போக்கிவிடும் கந்தனே நீ
(கடற்கரையில்)

**சரணம்**

உடற்குரிய உதிரமெல்லாம் கொடுத்தவன் நீதானே
குடற்குரிய கோலமெல்லாம் அளித்தவனும் நீயேதானே
படற்கரிய துன்பமெல்லாம் பஞ்சாய் பறந்தோட
சுடர்க்குன்றே தொண்டைமானாற்றங் கரையுறை சந்நிதியானே வேலே.
(கடற்கரையில்)

- திருமதி தெய்வநாயகி கிருஷ்ணசாமி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

"அன்பே சிவம்" என்பது திருமூலர் அருளிய உயரிய அன்பு நெறியாகும். நாம் நமது வாழ்வில் பிறர்மீது காட்டும் அன்பு என்பது இக் கருத்தில் அடங்காது. நாயனார் கூறியது யாதெனில், ஆன்மா இறைவன்மீது வைக்கும் அன்பினையே அது குறித்துள்ளது. அதனையே "அன்பே சிவம்" என்று கூறியுள்ளார். ஆன்மாவும் இறைவனும் ஐக்கியப்படுதல் என்பதும் சரியான கருத்தல்ல. இறைவனாகிய பரம்பொருளுடன் சாதாரண நிலையிலுள்ள ஆன்மா எங்ஙனம் ஐக்கியமடைய முடியும்? அது முடியாதல்லவா. எனவே அக்கருத்தானது ஆன்மா இறைவனையடையும் நிலையையே குறித்துள்ளது என்பதை உணரலாம். ஆன்மா இறை உலகத்தையடைந்து அங்கு நிலையாக சுகித்திருக்க முடியுமே தவிர இறைவனுடன் ஐக்கியமடைய முடியாது. இன்று ஆன்மாவுக்குள் (உயிர்) இறைவன் (சிவம்) உள்ளான். யோகம் சித்திக்கில் இறைவனுக்குள் ஆன்மா சென்றடைதல் வேண்டும். இதற்காக நாம் கற்றுக்கொண்ட போதனையானது திருமூலநாயனார் வழிகாட்டி வைத்துள்ள அட்டாங்க யோக சாதனையாகும். இந்த யோகநெறியாவது ஆன்மா இறைவன்மீது காட்டும் அன்பு நெறியாகும். அதுவே "அன்பே சிவம்" என எடுத்தாளப்பட்டுள்ளது. அட்டாங்க யோக சாதனையில் மனிதனின் உயிராற்றல் இறைவனை நோக்கித் திசை திருப்பப்படுகின்றது.

அட்டாங்க யோகத்தில் எட்டு உறுப்புக்கள் உள்ளன. அவையாவன; இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவை ஒவ்வொன்றிலும் பேசப்படும் விடயமானது சிவத்தின்மீது அன்பு காட்டுங்கள் என்பதே. இறைவன்மீது அன்பு காட்டுவதானால் முதலில் செய்ய வேண்டியது "இயமம்" என்னும் புலனடக்கமே ஆகும். இயமம் என்பது "தீதகற்றுதல்" என விளக்கப்பட்டுள்ளமை காணலாம். அதாவது; தீயவற்றைக் கண்களால் பார்க்கக்கூடாது என்பதுபோல, நன்மை தருவனவற்றையே கண்களால் பார்த்தல் வேண்டும் என்பதாம். எல்லோருக்கும் புறக்கண் என்னும் உறுப்பு அமைந்திருப்பது வழமை. புறக்கண் பார்வையை நீக்கி அகக்கண் பார்வையைத் துரிதப்படுத்துதல் வேண்டும். அதுபோல் ஏனைய புற உறுப்புக்களின் செயற்பாடுகளும் அமைதல் வேண்டும். அதுபோல் இடைகலை, பிங்கலை ஆகிய இரு நாடிகளின் வழிவரும் சுவாசம் பிராணாயாமத்தினால் நிறுத்தப்பட்டு, சுழுமுனை வழிச் சுவாசம் திறக்கப்பட்டு பிராணன் நடுவு நிற்றல் வேண்டும் என்பது இதன் இன்னொரு விளக்கமாகும். இச் செயல்கள் யாவும் அன்பினால் நிகழ்பவையாகும். அந்த அன்பு அந்த இடத்தில் இல்லாதுபோனால் அச் செயலானது அங்கு நடைபெறமாட்டாது.

"நியமம்" என்பது நன்றாற்றலைக் குறிக்கும். புலனடங்கிய நிலையில் செய்யும் காரியங்கள் யாவும் நற் செயல்களாகவே அமையும். நமது உயிருக்குள் சிவனும் சக்தியும்

*நமது இன்றைய நிலையின் காரணம் நாம் எண்ணிய எண்ணங்களே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமையை நியமத்தின் உணர்தல் வேண்டும். அதனால் இறைவன்மீது வைத்துள்ள அன்பு காரணமாக நற்காரியங்களையே செய்தல் வேண்டும்.

தவம்செபம் சந்தோடம் ஆத்திகந் தானம்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்த னாமே.

-திருமந்திரம்.

உதாரணமாக, இயம நியமங்கள் இரண்டுமே மிக முக்கியமான அன்பு நெறியாகும் என திருமூலர் அருளியுள்ளார். இயமம் என்பது புலன்களை அடக்குதலாகும். புலன்களை அடக்குதல் என்பது இயலாத செயலாயினும், இறைவன்மீது அன்பு அதிகப்படின் புலனடக்கல் முயற்சி வீண்போகாது. புலன்கள் அடங்கினால் அது சிற்றறிவு எனப்படும். புலன்வழி அறிவு என்பது ஐவகை முயற்சியாய் அமையும். புலனறிவு புறமுகமாகப் புகுந்தோடும் சிற்றறிவு ஆகும். மனிதப் பிறவிகட்கு இப் புலனறிவு நன்கு பயன்படுகிறது. இத் திறம் விலங்கினங்களுக்குச் செம்மையாக அமையவில்லை. சிற்றறிவுத் திறம் விலங்குகளிடம் அமைந்திருக்கவில்லை. சிற்றறிவுத் திறம் அதிகமாக உடையோரையே நாம் அறிஞர் எனவும் அழைக்கின்றோம். மன அறிவு அகமுகமாகத் திருப்பப்படல் வேண்டும். அகமுகப்பட்ட ஐந்தறிவை ஆன்மபோதத்துடன் இணைத்திடுதல் வேண்டும். அதுவே யோக முயற்சியாகும். யோகமுயற்சி முற்றுப்பெற்றால் ஆன்மபோதக் குறைபாடு நீங்கும். எவ்விதமான யோகத்திற்கும் தெய்வபக்தி அடிப்படையானது. அன்பு இல்லாமல் யோகம் நிறைவேறாது. யோகம் ஆரம்பம் முதல் வளர்ந்து வருவதற்கு தெய்வம் அன்பை அடிப்படையாக அமைத்து வைத்துள்ளது. ஆகையால் அன்பை அடி நிலமாகக் கொண்டே அருள்பெற்று யோகப் பயிரை வளரச்செய்து, முத்தியடைவதற்கான சிவஞானத்தைப் பயனாக அடையவேண்டும். அன்பு என்பது வேறு, ஆசை என்பது வேறு. இரண்டும் ஒன்றல்ல.

அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

-குறள்.

"அன்பே சிவம்" என்பர். ஆசை அறுமின்கள் என்பதால் அன்புக்கும் ஆசைக்கும் உள்ள வேறுபாட்டினை அறியலாம். அன்பை அடிப்படையாகக் கொண்டே கிரியா யோகத்தை முற்றும் பயிலுதல் வேண்டும். கிரியாயோகம் எனப்படுபவை "அட்டாங்க யோகப்" படிமுறை களாகும். அவையாவன; அட்டாங்க யோகம் தொடக்கம் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி மற்றும் அட்டாங்க யோகப் பேறு என்பனவாம். இவை "கிரியா யோகம்" எனப்படும். அட்டமாசித்தி தொடக்கம் "வார சூலம்" வரையுள்ள ஏழு அதிகாரங்கள் ஆதாரயோகம் பற்றியவை. கேசரி யோகம் தொடக்கம் சந்திரயோகம் வரை நிராதர யோகம் ஆகும். இவற்றுள் அன்பை அடிப்படையாகக் கொண்டவை இம் மூன்றுமாகும். அன்பை அடிப்படையாகக் கொண்ட பின்னர் உண்மையோக

*ஓட்டைக் கூரையை மழை சாய்ப்பதுபோல் ஒழுங்கில்லா மனத்தை ஆசை சீர்குலைக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியை மேற்கொள்ள விரும்புவோர் யாராகிலும் கிரியா யோகம் முற்றாகப் பயிலல் வேண்டும். திருமந்திரம் நூல் மூன்றாம் தந்திரத்தில் திருமூலர் இவற்றை விளக்கியுள்ளார். அவர் அவசியமானவற்றையே அதில் விளக்கியுள்ளார். மனிதனின் ஆற்றல் என்பது மூன்று வழிகளில் வெளிப்படும். அவை உடம்பு, உள்ளம், அறிவு என்பனவாம். யோகத்தில் இம் மூன்றும் ஒன்றி நிற்றல் வேண்டும். இவற்றின் ஒன்றன் முரண்பாடு யோகநெறியைச் சீர்குலைத்துவிடும். அதனால் திருமூலர் படிப்படியான யோக நெறிகளை வகுத்து அமைத் துள்ளார். அவற்றில் முதலில் அருளப்பட்டது கிரியா யோகம் ஆகும். இந்த யோகம் உடல் பயிற்சிகளை ஆதாரமாகக் கொண்டவையாகும். அதனால் இதை ஹடயோகம் எனக் கூறுவர். எனவே இப் பயிற்சியை முற்றாகப் பயிலாமல் இன்னொன்றில் இறங்கிவிடக்கூடாது. குருவின் துணையுடனே யோகப் பயிற்சி செய்தல் வேண்டும். உள்ளம் பக்குவமடைய ஆதார யோகப் பயிற்சிகள் செய்தல் வேண்டும். நமது அறிவு பக்குவமடைய நிராதாரயோகப் பயிற்சிகள் செய்தல் வேண்டும். இவற்றின் பயன் பதிஞானம் பெறுதலே. "பதிஞானம்" முத்தியடைதலுக்கு வேண்டிய முழுத்தகுதியாகும். யோக நெறியினைச் சித்தாந்த முறையில் பயிலவிரும்புவோர் திருமந்திரம் நூல் மூன்றாம் தந்திரம் முழுவதும் படித்துணர்ந்து ஒழுகுதல் உயர்வுடைய செயலாகும். திருமந்திரம் மூன்றாம் தந்திரம் உலகிலுள்ள யாவருக்கும் பொதுவானது.

மக்கள் யாவரும் சிவவெளிக்குள்ளே வாழ்பவர்கள். அதனால் நாம் ஒருவருக்கொருவர் உறவு ஆக நிற்கிறோம். இதனால் சிவம் பொதுமைப் பொருளாகின்றது. இதனால் சைவ சித்தாந்தம் என்பது உலகினர்க்குப் பொதுவான கொள்கையுடையதே. எனவே உலகினர் யாவரும் பகைமை பாராட்டாமல் திருமந்திரம் நூலினைப் படித்துப் பயனடையலாம்.

மனிதர்கள் தமது உடம்பையும் உள்ளத்தையும் உயிரையும் பேணிக் காக்க வேண்டியவர்களாவர். அதற்குரிய வழி, யோகப்பயிற்சி செய்வதே. திருமூலர் அருளிய யோக முறைமைகளைப் பின்பற்றிப் பயிற்சிகள் செய்வோர்களுக்கு அதனால் பயன் உண்டு. உயிரைச் சிறப்படையச் செய்தல் மனிதரின் கடமையாகும். அதற்காக உடலையும் உள்ளத்தையும் பயன்படுத்துதல் வேண்டும். திருமந்திரம் மூன்றாம் தந்திரத்தில் (நூல்) இதற்கு வழி கூறப்பட்டுள்ளது. இறைவன்மீது அன்பு இன்றேல் இவை எதனையும் நாம் செய்து நிறைவேற்ற முடியாது. இப்போது எமது உயிருக்குள் சிவம் உள்ளது. இதை நாம் யோகப் பயிற்சியால் மாற்றி சிவத்துக்குள் உயிர் யோகமுற்று விளங்கும்படி செய்தல் வேண்டும்.

உடம்பை வலுப்படுத்துதல் யோகப் பயிற்சியின் நோக்காகும். அடுத்து உள்ளத்தை அலைபாயாது நாட்டமுறச் செய்தல் வேண்டும். இதற்கு யோக நெறியைப் பயன்படுத்தலாம். மூன்றாவது உயிரின் அறிவை மேம்படச் செய்து அதை உயர் அறிவாக மாற்றுதல் வேண்டும். கிரியா யோகத்தால் உடல் வலிமையைப் பெறலாம். ஆதார யோகத்தால் உள்ளத்தை ஒருமுகப்படுத்த முடியும். நிராதார யோகத்தால் உயிரை - ஆன்ம போதத்தைச் சிவபோதம் ஆக்குதல் கைவரப்பெறும்.

*எச்சரிக்கப்படுவதைவிட எச்சரிக்கை செய்வதே மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதார யோகத்தில் வரும் கலை நிலை அல்லது பிரசாதயோகம் என்னும் யோகம் யோகிக்கு இன்றியமையாதது. யோகி அருட்பேறு பெறுதல் வேண்டும். அதாவது இறைவனைச் சேர்வதற்கான திருவருட்பேறு பெறுதல் அருட்பேறு எனப்படும். இத் திருவருட்பேற்றினால் மரண சிந்தனை மறைந்து போகும். அட்டமா சித்திப்பேறு சாதாரணமானது. அதைவிடச் சிறந்த பேறு உடற்சித்தி. அதையும் விடச் சிறந்தது அருட்சித்தி. இதையும் விடச் சிறந்த பேறு முத்திச் சித்தி. முத்தி என்பதே பேரின்பநிலை. அட்டமாசித்திப் பேறாகிய வசித்துவம் பற்றி அருளிய திருமூலர் அதன் இறுதித் திருமந்திரத்தில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானாவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ் செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டறி வார்க்கு நமனில்லை தானே.

-திருமந்திரம் 711.

இதன் பொருள்: பிராணாலயம் பெற்று ஈசத்துவம் எய்தியவர்களுக்கு இறப்பு இல்லை. அதன் பேறாக முத்தி நிச்சயம் எனப்பட்டுள்ளது. பிராணனைக் கட்ட வல்லவர் களுக்கு விசேடமான ஆற்றல் கிடைக்கும். சுவாதிட்டானம் மட்டவிழ் தாமரை எனப் போற்றப்பட்டுள்ளது.

யோகியானவன் ஆயிரம் இதழ்க் கமலத் தாமரையில் தனது முழு மூச்சையும் செலுத்துதல் வேண்டும். அப்போதுதான் சகச் சிராரம் அருள் ஒளியால் திறப்புறும். அதனால் அமுத ஊற்று பொழியும். யோகி உலகக் காட்சிகளை மறந்திடுவான். தற் காட்சிகளையும் மறந்திடுவான். அதனால் சக்தி கலைகளை உளப்படுத்திக்கொண்டு துரிய அதீத நிலையை அடையமுடியும். இதன் காரணத்தால் கலைநிலை என்னும் பிரசாத யோகம் பயிலுதல் அவசியமாகிறது.

மனிதன் பிறக்கும்போதே அவனது உடலில் உயிரில் அன்பு ஓர் உயிரின் பண்பாகப் புகுத்தப்பட்டுள்ளது. உயிர் பிரியும் மட்டும் அன்புப் பண்பு இருக்கும் உயிருக்கு, "பண்பி" என்னும் பெயருமுண்டு. மனித இதயத்தில் அன்புப் பண்பு அமைகிறது. "அன்பு" இடையில் ஏற்படுவதன்று. அன்புப் பண்பு உயிருடன் ஒன்றுபட்டு இருக்கும் முத்தியிலும் அன்புப் பண்பு இருந்தே தீரும் என்பது சித்தாந்தம்.

ஆன்மாக்கள் யாவும் பெண்பாலனவாகவும், இறைவன் ஒருவனே நாயகனாகவும் கூறப்படும். இந்த நாயகனை அடைவதே ஆன்மாவின் கடமையாகும். அதுவே மாண்புமாகும். நாயகனே யாவற்றையும் நடாத்துபவன். சகல உயிர்களுக்கும் நடாத்துபவனாக உள்ள இறைவன் ஆன்மாக்கள் தன்னை அடைவதற்கும், அடைந்து இன்பக் களிப்பில் ஈடுபடுவதற்கும் ஆதாரமாக அன்பு எனப்படும் பண்பினை உயிரின் பண்பாக அமைத்துள்ளான். கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ்தல்போல, இறைவனும் ஆன்மாவும் ஒருமித்து இருத்தல் வேண்டும். அதற்குக் கருவி அன்பு ஆகும். அன்பு என்பது ஆன்மாவின் இயல்பான குணம். உயிரினிடம் அன்பு என்பது நிலையாக உள்ளமையால் இறைவன் உயிரில் தங்கியுள்ளான்.

*வாழ்வதில்தான் இன்பம். உழைப்பதில்தான் வாழ்வு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, உயிர் உள்ளவரை இறைவனும் அவ்வுயிரில் நிலையாக வாழ்வான் என்பது உறுதியானது.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

-திருமந்திரம் 270.

அன்புதான் சிவத்தை விளங்கச் செய்யும். காமம் வேறு; காதல் வேறு. காமம் கடியப்பட்டால்தான் காதல் முதிரும் அல்லது வளரும். இறைவன் காமம் கடிந்தவன். அறிவு இன்மையே ஆசைக்கு வித்து ஆக அமையும். அறிவுடைமை அன்புக்கு மூலமாக அமைந்துள்ளது. இறைவன் ஆசையறுத்தவராக, அற்றவராக இருப்பதால் ஆன்மாக்கள் தன்னையடைவதற்கும் அந்த நிலையை எதிர்பார்த்து ஆன்மாக்களைப் படைத்துள்ளார். ஆசைக்கு மாறுபட்டது காதல். அது உண்மை அன்பு. அதையே இறைவனும் ஆன்மாக்களிடம் எதிர்பார்க்கிறான். ஆதார யோகிக்கும் அன்புநெறி ஆதாரமாக அமையும். ஆதாரயோகி நிராதார யோகியாக மாறும்போதும் காமம் அற்ற காதலால் கசிந்துருகி இறைவனை மன மார எண்ணுதல் வேண்டும்.

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடில்
காதல் வழிசெய்து கங்கை வழிதரும்
காதல் வழிசெய்து காக்கலு மாமே.

-திருமந்திரம் 712.

ஆதாரயோகி அன்பின் பூரணத்துவத்தைப் பெற்றிடல் வேண்டும். ஆதார யோகியானவர், இறைவனிடம் இயற்கையாக அமைந்துள்ள இன்ப அன்பினை தனது அடிப்படையாகக் கொண்டு அதன்படி ஒழுகுதல் வேண்டும். இறைவன் ஆன்மாக்கள்மீது கருணைகொண்டு மனிதர்களின் சிரசின் உள்ளே அமுதச் சுரப்பினைக் கங்கைப் பிரவாகம்போல் அமைத்து வைத்துள்ளான். இப் பிரவாக நீரினையே அமுதப் பிரவாகம் என திருமூலர் குறிப்பிடுகின்றார். சிரசில் நடக்கும் காதல் - மோதல் ஆகிய செயற்பாட்டால் இந்த அமுதம் சுரப்பது திருமந்திர கருவூலத்தின் உச்சப் பயனாகும். இந்த மோதுதல் செயலானது பிராணன் - குண்டலினி சக்தியின் சேர்க்கையால் உண்டாகி, இறுதியில் பிராண சக்தியின் மோதுகைச் செயலால் பிரமரந்திரம் திறக்கப்பட்டு அமுதம் பொழிகிறது. இவை யாவுமே அன்பு என்னும் செயற்பாட்டினால் அமையுமேயன்றி வேறு எவ்வழியாலும் அமைவுறாது.

இறைவன் வகுத்தமைத்த அன்புநெறியைக் கவனித்து அதன்படி ஒழுகாத யோகி தன் அகத்துள்ளே சிவசோதியை - அருள் ஒளியைக் காணமாட்டான். அதனால் அமுதபானம் பருகிப் பசியின்றி வாழலாம். அதனால் சிவனருளால் தன்னைக் காத்துக் கொள்ளலாம். புலன்களின் இழுப்புக்கள், சேட்டைகளிலிருந்தும் தப்பலாம் என்பதும் "காக்கலுமாமே" என்னும் திருமந்திர வரிகளால் அறியலாம்.

*வயதில் மூத்தவர்களை மதிப்பவனுக்கு வாழ்க்கை அழகு, இன்பம் ஆகியவை அதிகரிக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையும்
காக்கலு மாகுங் கலைபதி னாறையுங்
காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவும்
காக்கலு மாகுங் கருத்துற நில்லே.

-திருமந்திரம் 713.

இவையெல்லாம் காதல் வழியால் காக்கப்படுவன. ஆதலின் அன்பு அதன் மூலமாக அமைகின்றது. இம் மந்திரத்தில் முதல் வரியில் அகக் கரணங்கள் நான்கும் அடங்குதல் பற்றியும், இரண்டாவது வரியில் சத்தி கலைகள் பதினாறும் வசப்படல் வேண்டும் என்பது பற்றியும், மூன்றாம் வரியில் குண்டலினி பிராணன் கலந்து மேல் எழுதல் வேண்டும் என்பது பற்றியும், இறுதி வரியில் சித்தம் கலக்கம் சிறிதுமின்றி நிலைக்க வேண்டும் என்பது பற்றியும் கூறப்பட்டுள்ளன. இவை ஒரே முறையிலன்றி படிப்படியாக அமைதலை ஆதாரயோகி உணர்ந்து செயற்படுதல் வேண்டும்.

"கலை" என்பது பல பொருள் ஒரு சொல். சந்திர கலை பதினாறு ஆகும். கலை காக்கப்பட்டமையால் சந்திரன் பூரணமும் பொலிவும் பெற்றான். சிவனிடம் அன்பு கொண்டு ஒழுகியமையால் அப்பேறு பெற்றான் சந்திரன். யோகியானவன் சத்தி கலைகளை வசம் செய்து கொள்ளல் வேண்டும். பரசிவத்திடம் அன்பு கொள்வதால் யோகி இதை எய்தலாம். அன்பு என்னும் தாய் பெற்ற பிள்ளை அருள் என்னும் குழந்தையாம்.

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

-குறள் 757.

இல்லறம் சிறக்கவும் அன்பு வேண்டும் என்பதும் வள்ளுவர் கருத்தாம். பிற உயிர்கள் மேல் அருள் பிறத்தலும் அன்பினால் வருவதேயாம். அன்பினது உண்மைபற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறினார்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

-குறள் 71.

உயிரோடு கூடிய உயிரானது அன்பு வழியில் இயங்குவதாகும். அந்த அன்பு இல்லாதவர்களுக்கு உள்ள உடம்பானது எலும்பும் தோலும் ஆகிய பயனற்ற உடலாகும்.

அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு.

-குறள் 80.

ஆசை இருக்கும்போது நமக்கு அன்பு வராது. அதனால் ஆசைகளை அறுத்தல் வேண்டும். எனவே மெய்யினை உணர்ந்து ஆசைகளை ஒழித்தல் வேண்டும்.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

-குறள் 362.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்மேல் உள்ள ஆசையையும் மக்கள் மேல் செல்லும் அன்பையும் அல்லது பாசத்தையும் நீக்குதல் வேண்டும். இறைவன்மீது அன்பு வையுங்கள். அவ்வாறு செய்யின் இலகுவில் இறைவனை அடையலாம். ஆசை இருக்கும் இடத்தில் இறையன்பு வராது. மக்கள் மேல் உள்ள அன்பினை நீக்கி இறைவன் மேல் அன்பு வையுங்கள் என்றுள்ளார் திருமூலர்.

வாசியும் மூசியும் பேசி வகையினால்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்த பின்
ஈசன் இருந்த இடம் எளிதாமே.

-திருமந்திரம் 2613.

உறுதியான சிவப்பற்றுடைய ஞானி தனது தேகத்தை விட்டால், சிவத்தின் அருளால் பின் சிவத்தைச் சார்ந்து விடுவார். இங்கு அன்பு என்பது சிவம் ஆகிறது. "அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்" என்னும் திருமூலர் வாக்கையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

ஸ்ரீ கிருஷ்ணனின் திருவாயில் யசோதா பிரமாண்டங்களைக் காணுதல்

ஒருநாள் பலராமனும் கிருஷ்ணனும் குழந்தையாக இருந்தபோது தம் நண்பர்களுடன்

## கந்தனே சரணம்

கதிர்காமருக்கு கருணைகாட்டிய கந்தனே சரணம்
கதிர்காமரை கதிரைமலைக்கு அழைத்த கந்தனே சரணம்
கதிர்காம பூசையினை கதிர்காமருக்கு கற்பித்த கந்தனே சரணம்
சுட்டபழத்தினை ஔவைக்கு அளித்த கந்தனே சரணம்
சுட்டபழமரத்தினை (நாவல்) தன்னகத்தே கொண்டவனே சரணம்
அடியார்க்கு அமுதளிக்கும் அன்னதானக் கந்தனே சரணம்
அனைவருக்கும் அறிவளிக்கும் "ஞானச்சுடரே" கந்தனே சரணம்.

கதிர்காமத்தில் கருணைமழை பொழியும் கந்தனே சரணம்
முத்துலிங்க சுவாமியாம் சித்தரின் சக்திமிக்க யந்திரவடிவே சரணம்
பத்தினியையும், புத்தனையும் தன்னருகே கொண்ட கந்தா சரணம்
அருணகிரிக்கு அருளிய அப்பனே கந்தா சரணம்
குமரகுருபரருக்கு "கந்தர் கலிவெண்பா" அருளிய கந்தனே சரணம்.

-த. செல்வசோதி-

*சிந்தனை இல்லாத மனிதன் பிணத்திற்குச் சமமானவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த சுத்தி

– திரு சு. இலங்கநாயகம் அவர்கள் –

சைவ சித்தாந்த தத்துவம் முப்பத்தாறு. மண் முதல் குணம் வரையுள்ள 24இலும் ஆன்ம தத்துவம். அடுத்த 7உம் வித்தியாதத்துவம். அடுத்த 5உம் சிவதத்துவம். ஆன்ம தத்துவத்தில் ஈறாகவுள்ளது அந்தக் கரணம். அந்தக் கரணம் ஒன்றாக இருந்தபோதும் அதன் செயற்பாடுகள் நான்கு வகையாக அமைந்துள்ளன.

01) நினைப்புக்கும், உணர்ச்சிகள் அனைத்திற்கும் உறைவிடமாக இருக்கும்போது அது - சித்தம்.

02) சங்கல்ப, விகல்ப மயமாயிருக்கும்போது அது - மனம்

03) நல்லது, கெட்டது என்று பாகுபடுத்தி ஆராயும்போது அது - புத்தி

04) செயலுக்குத் தான்தான் கர்த்தா என்று உணரும்போது அது - அகங்காரம்.

இந்தச் சித்தம் சுத்தம் அடையும்போது சிவன் அருளைப் பெறமுடியும். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் "சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரை, பக்தி மலர் தூவ, முத்தியாகுமே" என்கிறார். திருமூலரும், "உள்ளம் பெருங்கோயில்" என்கிறார். நாவுக்கரசரும் "நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா" என ஆலயத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

எனவே சித்தம் சுத்தம் அடைய நாம் எம்மால் இயன்றளவு சமூகத் தொண்டு, சமயத் தொண்டுகளில் ஈடுபட வேண்டும். நம் முன்னோர்கள் சிறிய சிறிய தர்மங்களை தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்துள்ளார்கள். நாயன்மார்கள் தொண்டுசெய்து உயர்ந்தவர்கள். நம் முன்னோர்கள் போட்டி, பொறாமை இன்றி குடும்பங்களுக்கிடையே பரஸ்பரம் உதவிசெய்து மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். சாதாரணமாக குடும்பங்களில் ஏற்படும் திருமணச்சடங்கு, மரணச்சடங்கு போன்றவற்றில் அவர்களது உறவினர்கள் ஒன்று சேர்ந்து அதற்குரிய செலவுகளைச் செய்தும், சரீர உதவிகள் செய்தும் நிறைவேற்றுவார்கள்.

அக் காலத்தில் ஏழைகளுக்கு மக்கள் தாமாக முன்வந்து உதவி செய்வார்கள். ஒரு திருமணத்திற்கு செல்பவர்கள் அந்தக் குடும்பத்திற்கு தங்களால் இயன்றளவு தமது வசதிக்கேற்றாற்போல் பண உதவி செய்வர். இதனால் திருமணத்தை நடாத்தும் குடும்பத்திற்கான சுமை குறைகிறது. சிறு துளி பெரு வெள்ளம் என்றதுபோல் பலரும் சிறு சிறு தொகை கொடுக்கவே மொத்தமாக கணிசமான தொகை கிடைக்கிறது. அக் காலத்தில் ஏழை பணக்காரன் என்ற அதிக வேறுபாடு இருக்கவில்லை. வசதி உள்ளவன் வசதி இல்லாதவனுக்குச் செய்யும் உதவியும் ஒருவகையில் தர்மம் ஆகிறது. உதவியைச் செய்பவனின் சித்தம் அதிகம் சுத்தமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறிய மக்களுக்கு உணவையோ அல்லது பணத்தையோ கொடுக்கும்போது ஏற்பவனிடத்தும் கொடுப்பவனிடத்தும் உண்மையான சந்தோஷமும் பிரியமும் நிரம்பி இருந்தன. தற்காலத்தில் வசதி படைத்த மக்கள் பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவற்றுக்குப் பெருந்தொகைப் பணம் செலவு செய்கின்றார்கள். ஒருவர் செய்வதைப் பார்த்து மற்றவரும் செய்ய முனைகிறார். இதனால் மக்களிடையே பரஸ்பர ஒற்றுமை குறைந்து போட்டியும் துவேஷமும் ஏற்பட வழிவகுக்கிறது. எனவே சமூகத்தில் தமது சூழலுக்கு ஏற்ப ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பாராட்டாது வாழப் பழகிக்கொள்ள வேண்டும். எனவே நமது செயற்பாடுகளால் மற்றவர்களுக்குத் தூண்டுதல் ஏற்படாமல் நடந்துகொள்வதன்மூலம் நமது சித்தம் சுத்தம் அடைகிறது.

நமது பிரதேசங்களில் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அகதி வாழ்வும், அனாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே நாம் ஒவ்வொருவரும் ஆடம்பர வாழ்வைக் குறைத்து சிக்கனம் மேற்கொண்டு எமது வருவாயில் மிச்சம் பிடித்து சேமிக்கும் பணத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு உதவவும் வசதி குறைவான கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவி செய்யவும் பயன்படுத்தலாம். இப்படிச் செய்யும் நமக்கு ஒரு மனத்திருப்தி ஏற்படுகிறது.

மேலும் பணவசதி இல்லாதவர்கள் தாம் என்ன செய்ய முடியும் என்று நினைக்கக்கூடாது. பணம் இல்லாவிடின் உடல் உதவிகளை மற்றவர்களுக்குச் செய்யலாம். பல சிரமதானப் பணிகளில் ஈடுபடலாம். ஆலயங்கள் அமைத்தல், குளம் தோண்டுதல், நூல் நிலையம் அமைத்தல், பாடசாலை கட்டுதல் போன்றவற்றுக்கு பண உதவியோ, சரீர உதவியோ செய்யலாம். அதேவேளை நமது ஆலயங்களிலும் பல பணிகளை மேற்கொள்ளலாம். ஆலய வீதிகளை துப்புரவு செய்தல், நந்தவனம் அமைத்தல், பூசைக்குரிய பூக்கள் கொய்தல், பூமாலை கட்டுதல், கூட்டுவது, கழுவுவது போன்ற பல பணிகளில் ஈடுபடலாம். பணம் இல்லாதவர்கள் சரீரத் தொண்டில் ஈடுபடலாம்.

இப்படியாகப் பல சமய சமூகப் பணிகள் செய்வதன்மூலம் நமது மனம் பக்குவப்பட்டால்தான் சித்த சுத்தி ஏற்படும். அந்தச் சுத்தமான சித்தத்தில் இறைவன் உறைவான். கலங்கிய நீரில் விம்பம் தெரியாது. அதுபோல் எமது சித்தம் கலங்கினால் சிவனைக் காண முடியாது. எனவே இறை பக்தியோடு மற்றவர் பொறாமை, பேராசை, கோபம், இன்னாச்சொல் ஆகிய நான்கும் அற்று சித்தம் தெளிந்து சுத்தம் அடையும்போது சிவரூப தரிசனம் செய்து இறைவன் அருளைப் பெறமுடியும்.

---

*மனிதன் ஒவ்வொரு அடியிலும் தனது உரிமை உரிமை எனப் பேசுகிறான். அவனுக்கு உரிமை என்பது எங்கிருக்கிறது? உண்மையில் அவனுக்கு இருப்பதெல்லாம் கடமைதான். கடமைகளை நிறைவேற்றிய பிறகுதான் உரிமை என்பதே ஏற்படுகிறது. கடமையை மறந்து மனிதன் தன் உரிமைக்காக சண்டை செய்யும்போது நமக்கு என்ன கிடைக்கும்? அமைதியின்மையே மனிதனுக்கு சொந்தமாகிறது.*

*ஒருவனுக்கு வலிமை எது என்றால் அது ஊக்கமிகுதியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ புராணங்கள் கூறும் சிவனடியார் பண்புகள்

— திரு செ. சிவபாதம் அவர்கள் —

**சிவனடியார்**

பெரியது கேட்கின் எரிதவள் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரிய திருமால் கொப்பூள் தாமரையில் வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் அகத்தியமுனி அங்கையில் அடக்கம்
அகத்திய முனிவர் கலசத்தில் பிறந்தவர்
கலசமோ பூமியின் சிறுமண்
பூமியோ அரவினுக்கு ஒரு தலைப் பாரம்
அரவமோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ சிவனின் பாகத்து ஒடுக்கம்
சிவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.

இப் பூமியில் மனிதப் பிறவியை எடுத்த ஒருவர் தாம் முற்பிறப்பில் செய்த தவப்பயனாக தகுந்த குரு மூலம் சிவதீட்சை பெற்று ஞான நூல்களைக் கற்று குரு மூலம் கேட்டுச் சிந்தித்து தெளிவடைந்து இருவினையொப்பு மலபரிபாகம் என்னும் பக்குவமடைந்து வேதாகமங்களில் கூறப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஆலயங்களிலும் சிவனடியார் களுக்கும் சிவத்தொண்டுகளைச் செய்து செந்தாமரை மலர் போன்று விளங்கும் சிவனது திருவடிகளை அடையமுடியாது மறைத்தலைச் செய்யும் மும்மல அழுக்கை ஞானநீரினால் கழுவிச் சிவனை மறவாது அன்பு செய்யும் சிவனடியாருடன் கூடிக் கலந்து மல மயக்கம் முற்றாக நீங்குதலால் அன்பு மயமாகவுள்ள அடியார் திருவேடத்தையும் குருவையும் சிவலிங்கத்தையும் சிவபெருமான் எனவே கண்டு வழிபாடு செய்பவர்கள் சிவனடியார் என்று சொல்லப்படுவர்.

செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார். (திருவள்ளுவர்)

*நல்ல மனச்சாட்சிதான் கடவுளின் குரல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருள்:**

செயற்கரிய செயலை யார் செய்கின்றாரோ அவர் பெரியவர். செயற்கரிய செயலைச் செய்யாதவர் சிறியவர் என்பது பொருளாகும்.

புண்ணியபூமி என்று சொல்லப்படும் தமிழ்நாட்டில் திருஞானசம்பந்தர் முதலாகச் சொல்லப்படும் நாயன்மார்கள் புறச்சமயத்தவரான சமண சமயத்தாருடனும் புத்த சமயத்தவருடனும் மக்கள் கூடி இருக்கும் சபையில் பெரும் வாதம் செய்து செயற்கரிய செயல்களையும் செய்து சைவசமயம் மெய்ச்சமயம் என்றும் புறச் சமயங்களெல்லாம் பொய்ச் சமயம் என்று காட்டி அவர்களையும் சைவசமயத்தவர்களாக மாற்றிய செயல் சிவனடியார்களது செயற்கரிய செயல்களாகும். உதாரணம் சமண சமயத்தைச் சேர்ந்த பாண்டியனுக்கு வெப்புநோயைக் கொடுத்துப் பின் மாற்றி சைவனாக்கியது.

**பெரியபுராணம் கூறும் சிவனடியார் பண்புகள்.**

01) சிவபிரான் சிவனடியார்களது உள்ளமாகிய ஆலயத்திலே வீற்றிருப்பதாலும் தாமும் ஒரு அடியவராக இருப்பதாலும் சிவனடியார்கள் பெரியவராவர். இத்துடன் இவர்கள் சிவனது திருவடித் தாமரைகளில் எப்போதும் அன்புடையவர்களாக வாழ்வர்.

02) குற்றமில்லாத உருத்திராக்க மாலையை அணிந்து விளங்கும் திருமேனியில் அணியப்பெறும் திருநீற்றின் புனிதம் போன்று உள்ளத்திலும் புனிதத்தன்மையுடையவர்களாக சிவனடியார்கள் விளங்குவார்கள்.

03) ஐம்பூதங்களும் தங்கள் நிலை கலங்கினாலும் சிவனது திருவடிகளை மறவாமல் அவரது திருமுறைகளை எப்போதும் ஓதுபவர்கள்.

04) ஓடு போன்ற பெறுமதி இல்லாத பொருளாக இருந்தாலும் பொன் போன்ற உயர்ந்த பொருளாக இருந்தாலும் விருப்பு வெறுப்பில்லாமல் இரண்டையும் ஒப்புநோக்கும் பண்புடையவர்கள் இத்துடன் இவர்கள் சிவபெருமானை வழிபடுவதே அல்லாமல் முத்தியும் வேண்டாம் என்று சொல்லும் பக்தியுடையவர்கள் இத்துடன் சிவனது திருவடியில் நெகிழ்ந்து உருகும் அன்புடையவராய் ஒரு குறையுமில்லாத மனத்தையுடையவராய் மகிழ்ச்சியுடன் திருவருள் முனைப்பில் வாழ்பவர்தான் சிவனடியார்கள்.

**கந்தபுராணம்**

மார்க்கண்டேயருக்கு ஆயுள் பதினாறு வயது முடிந்ததும் அவர் காசியில் வந்து சிவபூசை செய்துகொண்டிருக்கும்போது இயமன் அப்போது எருமைக்கடாவில் ஏறி பாசக் கயிற்றையும் தாங்கி மார்க்கண்டேயரை அழைத்துக்கொண்டு தமது நகரத்துக்கு போவதற்கு அவருக்கு முன்பாக வந்து தம்முடன் வரும்படி மார்க்கண்டேயரைக் கேட்க, மார்க்கண்டேயர் இயமன் சொல்லும் வார்த்தையைக் கேட்டுக் கோபமடைந்து இயமனைப் பார்த்து இயமனே கேள் இறப்பென்பது சிவனடியார்களுக்கு இல்லை. இருந்தாலும் உம்முடன் உனது உலகத்துக்குவரார் திருக்கைலாசமலைக்குப் போவார்கள். இவர்கள் துறவறத்தில் இருந்தாலும்

*கடவுள் நோயைக் கொடுக்கும்போதே கூடவே மருந்தையும் தருகிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்க்கையிலும் இருந்தாலும் முத்தி அடைவார்கள். இத்துடன் இவர்கள் பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணத்தையும் அறிந்தவர்கள். அவர்கள் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கியவர்கள். இவர்கள் உன்னை மதியார்கள். இந்திரனை மதியார்கள். பிரம்மா விஷ்ணு முதலிய பத முத்தியிலுள்ள தேவர்களையும் மதியார்கள். சிவபெருமானுக்கும் அவருடைய அடியவர்களுக்கும் வேற்றுமை காணுதல் அறியாமையாகும் என்று வேதங்கள் சொல்லுகிறது. இவர்களுடைய சிறப்பை யாவர் சொல்ல வல்லவர். இச் சிவனடியார்களை அடைந்த என்னுயிர்க்கும் தீங்கு செய்ய நினைத்தாய் மூடனே. நீ இங்கே நிற்காமல் போ போ என்று சொன்னார். அப்போது இயமன் இவரது வார்த்தையைக் கேட்டுக் கோபமடைந்து தன் கையிலுள்ள பாசக்கயிற்றை இவர்மீது வீசி இழுத்தான். அப்போது சிவபிரான் முன்பாகத் தோன்றி அன்பனே அஞ்சாதே என்று கூறி கோபமடைந்து இடது பாதத்தால் இயமனை உதைத்தார். அப்போது அவன் இறந்து பூமியில் வீழ்ந்தான். சிவன் மார்க்கண்டேயருக்கு இறுதி இல்லாத ஆயுளைக் கொடுத்து மறைந்தருளினார். பின்பு பிரம்மா விஸ்ணு இந்திரன் முதலிய தேவர்களது விருப்பத்துக்கமைய இயமனை மீண்டும் உயிர்பெற்று எழும்படிச் செய்ய இயமன் எழுந்து சிவனை வணங்கி மன்னிப்புக் கேட்டு நிற்க அப்போது சிவன் பின்வருமாறு கூறுவார்.

### சிவபெருமான் இயமனுக்கு சிவனடியார்கள் பற்றிக் கூறுவது

இயமனே எம்முடைய சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்க மாலைகளைத் தரித்துக்கொண்டு நம்மை உள்ளமாகிய கோயிலில் தியானம் செய்யும் அன்பர்களிடத்தே நான் இயமன் என்று சொல்லிக்கொண்டு போகாதே. எம் அடியார்களை மனிதர்களென்று நினையாது யாம் என்றே நினைப்பாய். இவ் அடியவர்களைக் கண்டால் அவர்களது பாதங்களில் வீழ்ந்து வணங்குவாய் என்று கூறினார். அப்போது சிவபிரானது திருவடிகளை வணங்கிக்கொண்டு உயிர்பெற்றெழுந்த எருமைக்கடாவில் ஏறி இருந்து தம் படைகளுடன் தன் நகரத்தையடைந்து தனது பணியைச் செய்துகொண்டிருந்தார்.

### சிவனடியார்கள்

அண்டரும் நான்முகத்து அயனும் யாவரும்
கண்டிட அரியது ஓர் காட்சிக் கண்ணவாய்
எண் தகு சிவன் அடி எய்தி வாழ்திருத் தொண்டர்
தம் பதமலர் தொழுது போற்றுவாம்.

---

படைக்கப்பட்டிருக்கும் படைப்புக்கள் அனைத்தும், தனது மகிழ்ச்சிக்காகவே என மனிதன் நினைக்கிறான். இந்நாளைய அறிவியல் வல்லுனர்கள் சிருஷ்டியில் இருக்கும் பல்வகைப்பட்ட சக்திகளை தங்கள் இஸ்டத்திற்கு பயன்படுத்துகின்றார்கள். இதுவே இயற்கை சீற்றம், வெள்ளம், பஞ்சம் போன்றவற்றுக்கு காரணிகள்.

*சுறுசுறுப்பான தேனீக்கு வருத்தப்பட நேரமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரோதங்களைக் களையும் குரோதியே வருக

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

மக்கள் உளம் பூரிக்கும்படியாகக் கொண்டாடப்படும், பேறான தினமே சித்திரைப் புத்தாண்டு ஆகும். தமிழர் தம் வாழ்வில் புனிதமான நாள் இதுவாகும். ஆம்! இலங்கையில் பௌத்தர்களும், தமிழர்களும் சித்திரைப் புத்தாண்டினை வெகு விமர்சையாகக் கொண்டாடி வருகின்ற, உன்னத நிகழ்வாகி இருப்பது, உலகத்தவர்களின் கவனத்தினை அதிசயிக்க வைத்துள்ளது. இத் திருநாளினை அனுபவிப்பதற்காகவே, உல்லாசப் பயணிகள் சித்திரை மாதத்தில் அதிகளவில் வருகை தருகிறார்கள். எம்மோடு கலந்து கொண்டாடுகின்றனர்.

இலங்கையர்களின் வாழ்விலே புதியதோர் வாழ்வு ஆரம்பமாகிறது. பேறுகள் வரமாகிறது. புதிய எண்ணங்களோடு, புதிய புதிய மனிதர்களாகத் தம்மை அடையாளப்படுத்த திடசங்கற்பம் பூணுகிறார்கள். ஆண்களும் பெண்களும் சமத்துவமாகப் பேதங்கள் மறந்து, வாதங்கள் தவிர்த்து நாதங்களாய் வெல்கிறார்கள்.

தமிழ் சிங்கள புத்தாண்டானது இரண்டு கோடியே இருபது இலட்சம் மக்களின் தேவைகளை உணர்ந்து பொறுப்போடு பிறக்கின்றது. உணவு, உடை, உறையுள் மூன்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அத்தியாவசியமான ஆதார தேவைகள் என்பதை உணர்ந்தவாறு புதிய வருஷமான குரோதி என்ற புதிய ஆண்டு பிறக்கின்றது.

யாழ்ப்பாணம் - கொக்குவில் இ.சி. இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ. வெங்கடேச ஐயர் அவர்களின் ஜேஷ்ட புத்திரன் வெ. இரகுநாதையரால் கணிக்கப்பெற்ற வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம், 13.04.2024 சனிக்கிழமை முன்னிரவு நாடி 35, விநாடி 25 மணி 08.15 (P.M) பூர்வ பக்க ஷஷ்டி திதியில் மிருகசீரிட நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் சோபனம் நாமயோகத்தில், துலா லக்கினத்தில், மிதுன நவாம்சத்தில், சனிகாலவோரையில், தாமத குணவேளையில், வல்லூறு அரசுத்தொழிலும், சூக்கும பக்ஷி உண்டித் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய குரோதி வருஷம் பிறக்கின்றது. இரவு குரோதி வருடம் பிறந்தாலும் 14.04.2024 ஞாயிறன்று, தமிழுக்கு சித்திரை முதலாந்திகதி வருடப்பிறப்பென அறிவிக்கப்படுகின்றது. 13.04.2024உம், 14.04.2024உம் குரோதி வருடப் பங்காகி விஷேடமாகிறது.

சூரியன் மேட ராசியில் பிரவேசிப்பது முதல் மீன ராசியை விட்டு நீங்கும் வரையும் உள்ள காலப்பகுதியாகும். இது சௌர வருஷம் எனப்படுகிறது.

அயன வருஷம் எனப்படுவது, சூரியன் மேஷாயனத்தில் பிரவேசிப்பதுமுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாயனத்தில் நீங்கும் வரையுள்ள காலப்பகுப்பாகும். இந்தக் குரோதி வருஷம் மேஷராசி ஆரம்பத்துக்கு முன்னே 24 பாகை 11 கலை 11 விகலை தூரத்தில் இருக்கின்றது. ஒரு தமிழ் ஆண்டு வானியல் ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், திரி கரண யோக ஞான இதய சுத்தியுடன் அளவிடப்பட்ட காலத்தை துல்லியமாகக் கொண்ட காலமாகும். மேலும் வாரம் - 07, திதி - 30, கரணம் - 11, நட்சத்திரம் - 27, யோகம் - 27, இராசிகள்- 12 இவ்வாறு அமையும் தோரணையில், நவக்கிரக சஞ்சாரம், இஷ்ட தேச சூரிய உதய, உச்ச, அஸ்தமனம் போன்ற அடிப்படையில் சித்திரைப் புத்தாண்டு கணிக்கப்படுகிறது.

குரோதி வருஷம் பிறக்கின்ற இப் புண்ணிய காலத்தில், யாவரும் தூய பக்தி சிரத்தையோடு, மருத்துநீர் சிரசில் தேய்த்து, தலையில் புன் கிலையும், காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

மருத்து நீரில், தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீரக்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு ஆகிய 18 வஸ்துக்களை சுத்த ஜலத்தில் இட்டு காய்ச்சிக்கொள்ள வேண்டும். சிறப்பாக, தோஷ நட்சத்திரங்களான மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், சித்திரை, விசாகம், அனுசம், கேட்டை, அவிட்டம் இவற்றிற் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்தேயாக வேண்டும். மேலும் தம்மாலியன்ற தான தருமம் செய்தேயாக வேண்டும்.

14.04.2024 ஞாயிற்றுக்கிழமையன்று வைகறையில் துயிலெழுந்து, காலைக் கடன்களை இனிதே நிறைவேற்றி, தூய சிந்தையராகி, நீராடி, அறம் பொருள் இன்பப் பேறடைந்து, மங்கலப் பொருட்களைத் தரிசித்து, சூரியனுக்குப் பொங்கலிட்டு ஆலய தரிசனம் செய்யக்கடவீர்களாக.

இம்முறை, ஆதாயம் 87 ஆகவும், விரயம் 117ஆகவும் உள்ளமையினால், எமக்குப் பல சவால்கள் எம்மை எதிர்கொண்டுள்ளன. பொதுவாக இந்த ஆண்டில், முன் மழையானது- மிகுதியாகவும், பின் மழை சமமாகவும், உணவுப்பொருள் கமத்தொழில் விருத்தி, அரசசேவை முன்னேற்றம், கலைகள் வளர்ச்சி, பொருட்கள் விலையேற்றம், மரணபயம், தொற்றும் நோய்களின் அச்சம், தொற்றா நோய்களின் காட்டம், இயற்கை அனர்த்தங்களின் காலநிலை மாற்றம், போராட்ட மாற்றங்கள், ஆயுள் குறைவு, வீதி விபத்துக்கள், ஆசிரிய மாணவ பெற்றோர் முரண்பாடுகள், சிறுவர் பெண்கள் துஷ்பிரயோகங்கள், முதியோர்களின் பக்குவ பண்பாடு தட்டுப்பாடு, இளமைக்குத் திரும்புதல், பஞ்சமா பாதகங்களின் இருப்பு, விவாகரத்துக்கள், நாட்டுக்குள் முரண்பாடுகள், எல்லைப்பிரச்சனைகள், தலைவர்களின் திடீர் சுகவீனங்கள், யாவும் எல்லை மீறலாம். பஞ்சாங்கம் இப்படிச் சொல்கிறது.

"கோரக் குரோதிதனில் கொள்ளை மிகும் கள்ளரினால்,
பாரில் சனங்கள் பயமடைவார் கார்மிக்க
அற்பமழை பெய்யும் அஃகங் குறையுமே
சொற்ப விளைவு உண்டெனவே சொல்"

*ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் தேவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரோதி வருடத்தில் சவாலாக இருப்பவை:**

வறுமையால் வாடும் மக்கள், வரட்சியினால் அழியும் பயிர்கள், கடின உழைப்புக்கான தட்டுப்பாடு, யாசகர்களின் அதிகரிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், வீடற்றவர்கள், காணியற்றவர்கள், நோயாளர்களின் அதிகரிப்பு, எயிட்ஸ், விபச்சார எண்ணிக்கை அதிகரிப்பு, பாடசாலை மாணவர்களின் இடை விலகல், எழுத்தறிவின்மையாளர்கள், வாகனப் பாவனையாளர்களின் கவனக்குறைவு, போதைப் பாவனையாளர்களின் அதிகரிப்பு, பெற்றோரில்லாத குழந்தைகளின் பாதுகாப்பு, மாற்றுத்திறனாளிகளின் அதிகரிப்பு, பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு, சிசுக்கொலை, கருக்கலைப்பு, தொலைபேசிப் பாவனையும், பாதிப்பும்.

குரோதி வருஷ கைவிஷேச பாரம்பரிய வைபவ நிகழ்வு மிகவும் பயபக்தியோடு கொண்டாடப்படுகிறது.

குடும்பத் தலைவரினாலும், வயதுக்கு மூத்தவர்களினாலும் கைவிஷேசம் ஏனைய குடும்பத்தவர்களுக்கு வழங்கப்பட்டு பணப் பாவனை ஆரம்பித்து வைக்கப்படுகிறது. சிறு பிள்ளைகளுக்கு இஃதோர் வரப்பிரசாதமாகும்.

வெற்றிலையில், நெல்லு, மஞ்சள், பூக்கள், பழம், பாக்கு, நாணயக் குற்றிகள், தாள் காசு ஆகியன வைத்து கையளிக்கப்படும்.

எத்தனை நெல்லுகள் கிடைக்கின்றனவோ அதுவே வாழ்க்கையாக அமையும். உதாரணமாக 67 நெல்லுகள் கிடைக்குமாயின் அதனுடைய தாற்பரியம், "நீ துயரப்படுகிறாய் சுகம் வரும்" என்பதாகும். 27 நெல்லுகள் இருக்கும் பட்சத்தில், "தெய்வ சகாயமுண்டு. காரிய ஜெயம்" என்பதாகும்.

இலங்கையின் சகல இந்து ஆலயங்களிலும், குரோதி வருடப்பிறப்பன்று விஷேட அபிடேக ஆராதனைகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான இரண்டு ஆலயங்களில் மிகச் சிறப்பாகத் திருவிழாக்கள் கீர்த்தி பெறுகின்றன.

முதலாவது அளவெட்டி அளவோலை விநாயகர் ஆலயத்தில், அன்றைய நாள் கொடியேற்றத் திருவிழாவும், 14.04.2024 ஞாயிறன்று மருதடி விநாயகர் ஆலயத்தில் தேர்த்திருவிழாவும் மிக மிகக் கோலாகலமாக நடைபெறுகின்றன. பக்தகோடிகளின் பரவசமான பக்தி ஆரவாரங்களைக் கண்டு புதுவருடத்தில் பேரின்பம் அடையலாம். பேறு கொள்ளலாம்.

ஆலய தரிசனம் செய்தபின்னர், குரோதி வருட சுப முகூர்த்தங்கள் இடம்பெற ஆவன செய்யப்படும். அவற்றில், விருந்து, குரு ராஜ பிரபு சினேக தரிசனம், வித்தியாதாரம்பம், கலப்பை புதுப்பித்தல், பூமிப்பிரவேசம், ஏர்மங்கலம், தோட்டச் செய்கை, தானியம் விதைத்தல், நாற்று நடுதல், வான் பயிர்கள் நடுதல், வியாபார புதுக்கணக்குப் பதிதல், தானியப் பெட்டகம் திறந்து சேமிக்க ஆரம்பித்தல், மாட்டுக்குக் குறி சுடுதல், சூடு மிதித்தல், அன்னப் பிரசானம், கிணறு குளம் தோண்டுதல், சீமந்த நாள் குறித்தல், தீட்சையளித்தல், காது குத்துதல், உபநயனம், நிச்சயதார்த்தம், பொன்னுருக்குதல், தேவப்பிரதிட்டை, வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேய்தல், ஓலை வெட்டுதல் மற்றும் அத்தனைக்கும் வருஷப் பிறப்பன்று சுப நேரத்தில் புதிய பஞ்சாங்கம் பார்த்து நாள் குறிக்கப்படும் காரணம், ஒரு புதிய வருடத்திற்கான திட்டமிடுதலில் நாம் வெற்றிகண்டு வருகின்ற பாங்கதனை எல்லோருக்கும் பொறுப்புடைய தாக்குவதாகும். புத்தாண்டு மலரப்போகின்ற செய்தியை மகிழ்வோடு எல்லோருக்கும் தெரியப்படுத்தும் முகமாக, ஒன்று சேர்ந்து புத்தாண்டுப் பாடலைப் பாடுவார்கள்.

புத்தாண்டு மலரப் போகுது - சித்திரைப்
புத்தாண்டு மலரப் போகுது
செந்தமிழ் மக்கள் வந்தனை செய்திட
சிந்து இசைத்துக் கை கொட்டியே பாடுவோம்

வீடு வாசல் முற்றம் சேருமிடமெல்லாம்
நல்லாக் கூட்டுங்கடி,
வெற்றிலைகள் கட்டுக் கட்டாக
ஒடித்து வையுங்களடி,

வாழையிலை மஞ்சள் பொடி கொஞ்சம்
இடித்து வையுங்கடி,
வாசலில் கோலங்கள் வடிவாகப் போட்டு
வரவேற்க நில்லுங்கடி

நிறைகுடம் குத்துவிளக்கு வைத்து
நீள வாழ்த்துங்கடி,
நெஞ்சினில் ஆயிரம் பிறையுடன்
நூறாண்டு வாழ்கவே.

நேற்று இன்று நாளை என்றும்
நெக்குருகி வாழ்க.

(புத்தாண்டு மலரப்போகுது)

**போர்த்தேங்காய் உடைத்தல்**

தேங்காயின் பலமா? தேகத்தின் பலமா? இரண்டும் ஒத்துழைப்பு நல்கினால் மட்டுமே போர்த் தேங்காய் சிதறி உடைபடும். நான்கு மாதத்திற்கு முன்னதாகவே வைரத் தேங்காய்களை நீருக்குள் போட்டு ஊற வைப்பார்கள். நன்றாக ஓடானது வைரம் பாய்ந்தபின்பு வருடப்பிறப்புக்கு முதன்நாள் வெளியில் எடுத்து நிழலில் காய வைப்பர். போட்டியின்போது கசடுகள் அகற்றி, சாமியறைப் படத்தடியிலே பூஜைக்கு வைப்பர். போட்டியின்போது நீறு பூசி, பொட்டிட்டு மாப்பிள்ளை முகம்போல போட்டியாளரால் மினுக்கப்படும்.

*இரப்பவன் தன்னைத் தானே விலைப்படுத்திக்கொள்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

03.05.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "சமயமும் சமூகமும்"
வழங்குபவர் :- திரு ஜெ. கோபிராஜ் அவர்கள்
[ஆசிரியர்]

---

10.05.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "ஆலய வழிபாடும் அதன் நிலையும்"
வழங்குபவர் :- திரு S.T. குமரன் அவர்கள்
[சைவப்புலவர்]

---

17.05.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
"இன்னிசை"
(பக்கவாத்திய சகிதம்)

---

24.05.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)
வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்
[ஆசிரியர்]

---

31.05.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் வைகாசி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு செ. ஞானசபேசன் அவர்கள்
[இளைப்பாறிய கிராம சேவகர்]
மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்
[ஆசிரியர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி]

**317 ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org